திருக்குறள்

# திருக்குறள்

(மூலம் மட்டும்)

தமிழ் நூற் பதிப்பகம்
காஞ்சிபுரம்.

இப்பதிப்பில் எழுத்துப் பிழைகள் இருப்பின், தயவுசெய்து எழுதி அனுப்ப வேண்டுகிறோம். மறு பதிப்பில் அவைகளை திருத்தி அச்சிடுகிறோம்.

தமிழ் நூற் பதிப்பகம்.

## அதிகாரம் 1.] [கடவுள் வாழ்த்து.

1. அகரம் முதல எழுத்துஎல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு.

2. கற்றதனால் ஆய பயன்என்கொல்? வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

3. மலர்மிசை ஏகினான் மாண்அடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

4. வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்
யாண்டும் இடும்பை இல. [தார்க்கு

5. இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

6. பொறிவாயில் ஐந்துஅவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

7. தனக்குஉவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு
மனக்கவலை மாற்றல் அரிது. [அல்லால்

8. அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

9. கோள்இல் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

10. பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

1. வான்நின்று உலகம் வழங்கி வருதலான்
தான்அமிழ்தம் என்றுஉணரற் பாற்று.

2. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

3. விண்நின்று பொய்ப்பின் விரிநீர் வியன்உலகத்து
உள்நின்று உடற்றும் பசி.

4. ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

5. கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று
எடுப்பதூஉம் எல்லாம் மழை. [ஆங்கே

6. விசும்பின் துளிவீழின் அல்லால்மற்று ஆங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது.

7. நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்துஎழிலி
தான்நல்காது ஆகி விடின்.

8. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

9. தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்
வானம் வழங்காது எனின்.

10. நீர்இன்று அமையாது உலகுஎனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு.

1. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு.

2. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று.

3. இருமை வகைதெரிந்து ஈண்டு அறம்பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு.

4. உரன்என்னும் தோட்டியால் ஓரைந்தும் காப்பான்
வரன்என்னும் வைப்பிற்குஓர் வித்து.

5. ஐந்துஅவித்தான் ஆற்றல் அகல்விசும்பு உளார்கோமான்
இந்திரனே சாலும் கரி.

6. செயற்குஅரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்குஅரிய செய்கலா தார்.

சுவைஒளி ஊறுஓசை நாற்றம்என்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு.

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

குணம்என்னும் குன்றுஏறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது.

அந்தணர் என்போர் அறவோர்மற்று எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டுஒழுக லான்.

1. சிறப்புஈனும் செல்வமும்ஈனும் அறத்தின் ஊங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு.

2. அறத்தின்ஊங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்குஇல்லை கேடு.

3. ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல்.

4. மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற.

5. அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

6. அன்றுஅறிவாம் என்னாது அறம்செய்க; மற்றுஅது
பொன்றுங்கால் பொன்றாத் துணை.

7. அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை.

8. வீழ்நாள் படாஅமை நன்றுஆற்றின் அஃதுஒருவன்
வாழ்நாள் வழிஅடைக்கும் கல்.

9. அறத்தான் வருவதே இன்பம் மற்றுஎல்லாம்
புறத்த புகழும் இல.

10. செயற்பாலது ஓரும் அறனே ஒருவற்கு
உயற்பாலது ஓரும் பழி.

1. இல்வாழ்வான் என்பான் இயல்புஉடைய மூவர்க்
நல்ஆற்றின் நின்ற துணை. [கும்

2. துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.

3. தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் தான்
ஐம்புலத்துஆறு ஓம்பல் தலை. [என்றுஆங்கு

4. பழியஞ்சிப் பாத்துஊண் உடைத்துஆயின்
வழிஎஞ்சல் எஞ்ஞான்றும் இல். [வாழ்க்கை

5. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

6. அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவது எவன்?

7. இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை.

8. ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து.

9. அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை; அஃதும்
பிறன்பழிப்பது இல்ஆயின் நன்று.

10. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறை
தெய்வத்துள் வைக்கப் படும். [யும்

1. மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

2. மனைமாட்சி இல்லாள்கண் இல்ஆயின் வாழ்க்கை
எனைமாட்சித்து ஆயினும் இல்.

3. இல்லதுஎன் இல்லவள் மாண்புஆனால் உள்ளதுஎன்
இல்லவள் மாணாக் கடை.

4. பெண்ணின் பெருந்தக்க யாவுள? கற்புஎன்னும்
திண்மைஉண் டாகப் பெறின்.

5. தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதுஎழுவாள்
பெய்எனப் பெய்யும் மழை.

6. தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்வுஇலாள் பெண்.

7. சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும்? மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை.

8. பெற்றான் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்
புத்தேளிர் வாழும் உலகு. [புப்

9. புகழ்புரிந்த இல்இலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை.

10. மங்கலம் என்ப மனைமாட்சி; மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

1. பெறும்அவற்றுள் யாம்அறிவது இல்லை அறிவு
மக்கட்பேறு அல்ல பிற. [அறிந்த

2. எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கள் பெறின்.

3. தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையால் வரும்.

4. அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்.

5. மக்கள்மெய் தீண்டல் உடற்குஇன்பம் மற்றுஅவர்
சொல்கேட்டல் இன்பம் செவிக்கு.

6. குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்.

7. தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்.

8. தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்உயிர்க்கு எல்லாம் இனிது.

9. ஈன்ற பொழுதின் பெரிதுஉவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

10. மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனுஞ் சொல்.

1. அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

2. அன்புஇலார் எல்லாம் தமக்குஉரியர் அன்புஉடை
என்பும் உரியர் பிறர்க்கு. [யார்

3. அன்போடு இயைந்த வழக்குஎன்ப ஆர்உயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு.

4. அன்புஈனும் ஆர்வம் உடைமை; அதுஈனும்
நண்புஎன்னும் நாடாச் சிறப்பு.

5. அன்புஉற்று அமர்ந்த வழக்குஎன்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு.

6. அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை.

7. என்பில் அதனை வெயில்போலக் காயுமே
அன்பில் அதனை அறம்.

8. அன்புஅகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம்தளிர்த்து அற்று.

9. புறத்துஉறுப்பு எல்லாம் எவன்செய்யும்? யாக்கை
அகத்துஉறுப்பு அன்பி லவர்க்கு.

10. அன்பின் வழியது உயிர்நிலை, அஃதுஇலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

1. இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம்
வேளாண்மை செய்தல் பொருட்டு. [விருந்துஓம்பி

2. விருந்து புறத்ததாத் தான்உண்டல் சாவா
மருந்துஎனினும் வேண்டற்பாற்று அன்று.

3. வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று.

4. அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகன்
நல்விருந்து ஓம்புவான் இல். [அமர்ந்து

5. வித்தும் இடல்வேண்டும் கொல்லோ? விருந்துஓம்பி
மிச்சில் மிசைவான் புலம்.

6. செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

7. இனைத்துணைத்து என்பதொன்று இல்லை;
துணைத்துணை வேள்விப் பயன். [விருந்தின்

8. பரிந்துஓம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்துஓம்பி
வேள்வி தலைப்படா தார்.

9. உடைமையுள் இன்மை விருந்துஓம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு.

10. மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

## அதிகாரம் 10.] [இனியவை கூறல்.

1. இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

2. அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகன்அமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்.

3. முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம்.

4. துன்புறூஉந் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.

5. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற.

6. அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்.

7. நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்.

8. சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும்.

9. இன்சொல் இனிதுஈன்றல் காண்பான் எவன்
வன்சொல் வழங்கு வது. [கொலோ?

10. இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று.

1. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் மாற்றல் அரிது.

2. காலத்தி னால்செய்த நன்றி சிறிதுஎனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

3. பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது.

4. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

5. உதவி வரைத்தன்று உதவி; உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

6. மறவற்க மாசற்றார் கேண்மை; துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு.

7. எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு.

8. நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

9. கொன்றுஅன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்.

10. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வு
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. [இல்லை

1. தகுதி எனஒன்று நன்றே பகுதியான்
பாற்பட்டு ஒழுகப் பெறின்.

2. செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவுஇன்றி
எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து.

3. நன்றே தரினும் நடுவுஇகந்துஆம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்.

4. தக்கார் தகவுஇலர் என்பது அவர்அவர்
எச்சத்தால் காணப் படும்.

5. கேடும் பெருக்கமும் இல்அல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க்கு அணி.

6. கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்
நடுஒரீஇ அல்ல செயின்.

7. கெடுவாக வையாது உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.

8. சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து
கோடாமை சான்றோர்க்கு அணி. [ஒருபால்

9. சொல்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உள்கோட்டம் இன்மை பெறின்.

10. வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின்.

1. அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆர்இருள் உய்த்து விடும்.

2. காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனின்ஊஉங்கு இல்லை உயிர்க்கு.

3. செறிவுஅறிந்து சீர்மை பயக்கும் அறிவுஅறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின்.

4. நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

5 எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து.

6. ஒருமையுள் ஆமைபோல் ஐந்துஅடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து.

7. யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்இழுக்குப் பட்டு.

8. ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றுஆகாது ஆகி விடும்.

9. தீயினால் சுட்டபுண் உள்ஆறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

10. கதம்காத்துக் கற்றுஅடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து.

1. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

2. பரிந்துஓம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்துஓம்பித்
தேரினும் அஃதே துணை.

3. ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

4. மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்புஒழுக்கம் குன்றக் கெடும்.

5. அழுக்காறு உடையான்கண் ஆக்கம்போன்று
ஒழுக்கம் இலான்கண் உயர்வு. [இல்லை

6. ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக்கு அறிந்து.

7. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.

8. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

9. ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயால் சொலல்.

10. உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

1. பிறன்பொருளாள் பெட்டுஒழுகும் பேதைமை
அறம்பொருள் கண்டார்கண் இல். [ஞாலத்து

2. அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரின் பேதையார் இல்.

3. விளிந்தாரின் வேறுஅல்லர் மன்ற தெளிந்தார்இல்
தீமை புரிந்துஒழுகு வார்.

4. எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத்
தேரான் பிறன்இல் புகல். [துணையும்

5. எளிதுஎன இல்இறப்பான் எய்தும் எஞ்ஞான்றும்
விளியாது நிற்கும் பழி.

6. பகைபாவம் அச்சம் பழிஎன நான்கும்
இகவாவாம் இல்இறப்பான் கண்.

7. அறன்இயலான் இல்வாழ்வான் என்பான்
பெண்மை நயவா தவன். [பிறன்இயலாள்

8. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு.

9. நலக்குஉரியார் யார்எனின் நாமநீர் வைப்பில்
பிறற்குஉரியாள் தோள்தோயா தார்.

10. அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று.

1. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

2. பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று.

3. இன்மையுள் இன்மை விருந்துஒரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

4. நிறைஉடைமை நீங்காமை வேண்டின் பொறை
போற்றி ஒழுகப் படும். [உடைமை

5. ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து.

6. ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்.

7. திறன்அல்ல தன்பிறர் செய்யினும் நோநொந்து
அறன்அல்ல செய்யாமை நன்று.

8. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தான்தன்
தகுதியால் வென்று விடல்.

9. துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோக்கிற் பவர்.

10. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின்.

1. ஒழுக்குஆறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு.

2. விழுப்பேற்றின் அஃதுஒப்பது இல்லை யார்
அழுக்காற்றின் அன்மை பெறின். [மாட்டும்

3. அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறன்ஆக்
பேணாது அழுக்கறுப் பான். [கம்

4. அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்
ஏதம் படுபாக்கு அறிந்து. [காற்றின்

5. அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்
வழுக்கியுங் கேடுஈன் பது.

6. கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூ
உண்பதூஉம் இன்றிக் கெடும். [உம்

7. அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்
தவ்வையைக் காட்டி விடும். [யவள்

8. அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீஉழி உய்த்து விடும்.

9. அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்.

10. அழுக்கற்று அகன்றாரு மில்லை;அஃதுஇல்லார்
பெருக்கத்தில் தீர்ந்தாரும் இல்.

1. நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்.

2. படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர்.

3. சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

4. இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்.

5. அஃகி அகன்ற அறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்.

6. அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்
பொல்லாத சூழக் கெடும். [வெஃகிப்

7. வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் விளைவயின்
மாண்டற்கு அரிதாம் பயன்.

8. அஃகாமை செல்வத்திற்கு யாதுஎனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

9. அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறனறிந்து ஆங்கே திரு.

10. இறலீனும் எண்ணாது வெஃகின் விறலீனும்
வேண்டாமை என்னும் செருக்கு.

1. அறம்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறம்கூறான் என்றல் இனிது.

2. அறன்அழீஇ அல்லவை செய்தலின் தீதே
புறன்அழீஇப் பொய்த்து நகை.

3. புறம்கூறிப் பொய்த்துஉயிர் வாழ்தலின் சாதல்
அறம்கூறும் ஆக்கம் தரும்.

4. கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்.

5. அறம்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்
புன்மையால் காணப் படும்.

6. பிறன்பழி கூறுவான் தன்பழி உள்ளுந்
திறன்தெரிந்து கூறப் படும்.

7. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர்.

8. துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினர்
என்னைகொல் ஏதிலார் மாட்டு.

9. அறனோக்கி ஆற்றும்கொல் வையம் புறனோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை.

0. ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுஉண்டோ மன்னும் உயிர்க்கு.

1. பல்லார் முனியப் பயன்இல சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்.

2. பயன்இல பல்லார்முன் சொல்லல் நயன்இல
நட்டார்கண் செய்தலின் தீது.

3. நயன்இலன் என்பது சொல்லும் பயன்இல
பாரித்து உரைக்கும் உரை.

4. நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்
பண்புஇல்சொல் பல்லார் அகத்து.

5. சீர்மை சிறப்பொடு நீங்கும் பயன்இல
நீர்மை உடையார் சொலின்.

6. பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கட் பதடி எனல்.

7. நயன்இல சொல்லினும் சொல்லுக சான்றோர்
பயன்இல சொல்லாமை நன்று.

8. அரும்பயன் ஆயும் அறிவினர் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல்.

9. பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார்
மாசறு காட்சி யவர். [மருள்தீர்ந்த

10. சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க
சொல்லில் பயனிலாச் சொல்.

1. தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னும் செருக்கு.

2. தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

3. அறிவினுள் எல்லாம் தலைஎன்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்.

4. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு.

5. இலன்என்று தீயவை செய்யற்க செய்யின்
இலன்ஆகும் மற்றும் பெயர்த்து.

6. தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான்.

7. எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென்று அடும்.

8. தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வியாது அடியுறைந் தற்று.

9. தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்.

10. அருங்கேடன் என்பது அறிக மருங்குஓடித்
தீவினை செய்யான் எனின்.

1. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்ஆற்றும் கொல்லோ உலகு.

2. தாளாற்றித் தந்த பொருள்எல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

3. புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

4. ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

5. ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு.

6. பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்.

7. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.

8. இடன்இல் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்
கடன்அறி காட்சி யவர்.

9. நயனுடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயும்நீர
செய்யாது அமைகலா வாறு.

10. ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்கது உடைத்து.

1. வறியார்க்குஒன்று ஈவதே ஈகை மற்றுஎல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

2. நல்லாறு எனினுங் கொளல்தீது மேல்உலகம்
இல்எனினும் ஈதலே நன்று.

3. இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலன்உடையான் கண்ணே உள.

4. இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகங் காணும் அளவு.

5. ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.

6. அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

7. பாத்துஊண் மரீஇ யவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்டல் அரிது.

8. ஈத்துஉவக்கும் இன்பம் அறியார்கொல் தாம்உடைமை
வைத்திழக்கும் வன்கண் ணவர்.

9. இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல்.

10. சாதலின் இன்னாதது இல்லை இனிதுஅதூஉம்
ஈதல் இயையாக் கடை.

1. ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.

2. உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்குஒன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ்.

3. ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ்அல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல்.

4. நிலவரை நீள்புகழ் ஆற்றில் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு.

5. நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க்கு அல்லால் அரிது.

6. தோன்றின் புகழொடு தோன்றுக அஃதுஇலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

7. புகழ்பட வாழாதார் தன்நோவார் தம்மை
இகழ்வாரை நோவது எவன்.

8. வசையென்ப வையத்தார்க்கு எல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின்.

9. வசையிலா வன்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம்.

10. வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசைஒழிய
வாழ்வாரே வாழா தவர்.

1. அருள்செல்வஞ் செல்வத்துள் செல்வம் பொருட்
பூரியார் கண்ணும் உள. [செல்வம்

2. நல்ஆற்றான் நாடி அருள்ஆள்க பல்ஆற்றால்
தேரினும் அஃதே துணை.

3. அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல்.

4. மன்னுயிர் ஓம்பி அருள்ஆள்வாற்கு இல்என்ப
தன்னுயிர் அஞ்சும் வினை.

5. அல்லல் அருளாள்வார்க்கு இல்லை வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி.

6. பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி
அல்லவை செய்துஒழுகு வார்.

7. அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்
இவ்வுலகம் இல்லாகி யாங்கு. [லார்க்கு

8. பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருள்அற்றார்
அற்றார்மற்று ஆதல் அரிது.

9. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்
அருளாதான் செய்யும் அறம்.

10. வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து.

1. தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறிது ஊன்உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்.

2. பொருள்ஆட்சி போற்றாதார்க்கு இல்லை அருள்ஆட்சி
ஆங்குஇல்லை ஊன்தின் பவர்க்கு.

3. படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றுஊக்காது
உடல்சுவை உண்டார் மனம். [ஒன்றன்

4. அருள்அல்லது யாதுஎனில் கொல்லாமை கோறல்
பொருள்அல்லது அவ்வூன் தினல்.

5. உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊன்உண்ண
அண்ணாத்தல் செய்யாது அளறு.

6. தினல்பொருட்டால் கொல்லாது உலகுஎனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்.

7. உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதுஒன்றன்
புண்அது உணர்வார்ப் பெறின்.

8. செயிரின் தலைபிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரின் தலைப்பிரிந்த ஊன்.

9. அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று.

10. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்.

1. உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யா
அற்றே தவத்திற்கு உரு. [மை

2. தவமும் தவமுடையார்க்கு ஆகும் அவம்அதனை
அஃதுஇலார் மேற்கொள் வது.

3. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்.

4. ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும்.

5. வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டும் முயலப் படும்.

6. தவம்செய்வார் தம்கருமம் செய்வார்மற்று அல்லார்
அவம்செய்வார் ஆசையுள் பட்டு.

7. சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

8. தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும்.

9. கூற்றங் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு.

10. இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்.

1. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்.

2. வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம்
தான்அறி குற்றம் படின்.

3. வலியின் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.

4. தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்ந் தற்று.

5. பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்று
ஏதம் பலவும் தரும்.

6. நெஞ்சின் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார்இல்.

7. புறங்குன்றி கண்டனையர் ஏனும் அகங்குன்றி
மூக்கின் கரியார் உடைத்து.

8. மனத்தது மாசாக மாண்டார்நீர் ஆடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்.

9. கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங்கு அன்ன
வினைபடு பாலாற் கொளல்.

10. மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்.

1. எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு.

2. உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்.

3. களவினால் ஆகிய ஆக்கம் அளவுஇறந்து
ஆவது போலக் கெடும்.

4. களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமம் தரும்.

5. அருள்கருதி அன்புடையர் ஆதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல்.

6. அளவின்கண் நின்றொழுகல் ஆற்றார் களவின்கண்
கன்றிய காத லவர்.

7. களவென்னுங் கார்அறி வாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல்.

8. அளவுஅறிந்தார் நெஞ்சகத்து அறம்போல் நிற்கும்
களவுஅறிந்தார் நெஞ்சில் கரவு.

9. அளவுஅல்ல செய்துஆங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர்.

10. கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தேள் உலகு.

1. வாய்மை எனப் படுவதுயாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.

2. பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்.

3. தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.

4. உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

5. மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம்செய் வாரின் தலை.

6. பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை
எல்லா அறமும் தரும்.

7. பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

8. புறம்தூய்மை நீரான் அமையும் அகம்தூய்மை
வாய்மையால் காணப் படும்.

9. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

0. யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்துஒன்
வாய்மையின் அல்ல பிற. [றும்

1. செல்லிடத்துக் காப்பான் சினம்காப்பான் அல்லிடத்துக்
காக்கினென் காவாக்கால் என்.

2. செல்லா இடத்துச் சினம்தீது செல்லிடத்தும்
இல்அதனில் தீய பிற.

3. மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனுல் வரும்.

4. நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற.

5. தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

6. சினம்என்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

7. சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்துஅறைந்தான் கைபிழையா தற்று.

8. இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

9. உள்ளியது எல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின்.

10. இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.

1. சிறப்புஈனும் செல்வம் பெறினும் பிறர்க்குஇன்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

2. கறுத்துஇன்னா செய்தவக் கண்ணும் மறுத்துஇன்னா
செய்யாமை மாசுஅற்றார் கோள்.

3. செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமம் தரும்.

4. இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.

5. அறிவினால் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை.

6. இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கண் செயல்.

7. என்னைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணாசெய் யாமை தலை.

8. தன்னுயிர்க்கு இன்னாமை தான்அறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல்.

9. பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும்.

10. நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்
நோயின்மை வேண்டு பவர். [செய்யார்

**1.** அறவினை யாதுஎனின் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும்.

**2.** பகுத்துஉண்டு பல்உயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

**3.** ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றுஅதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

**4.** நல்ஆறு எனப்படுவது யாதுஎனின் யாதுஒன்றும்
கொல்லாமை சூழும் நெறி.

**5.** நிலைஅஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலைஅஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை.

**6.** கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாள்
செல்லாது உயிர்உண்ணும் கூற்று. [மேல்

**7.** தன்உயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்உயிர் நீக்கும் வினை.

**8.** நன்றுஆகும் ஆக்கம் பெரிதுஎனினும் சான்றோர்க்குக்
கொன்றுஆகும் ஆக்கம் கடை.

**9.** கொலைவினையர் ஆகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவார் அகத்து.

**10.** உயிர்உடம்பின் நீக்கியார் என்ப செயிர்உடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்.

1. நில்லா தவற்றை நிலையின என்றுஉணரும்
புல்லறி வாண்மை கடை.

2. கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று.

3. அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்.

4. நாள்என ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாள்அது உணர்வார்ப் பெறின்.

5. நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

6. நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் உலகு.

7. ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல.

8. குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு.

9. உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

10. புக்கில் அமைந்துஇன்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு.

1. யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

2. வேண்டின் உண்டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டியல் பால பல.

3. அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு.

4. இயல்பாகும் நோன்பிற்குஒன்று இன்மை உடைமை
மயலாகும் மற்றும் பெயர்த்து.

5. மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல்? பிறப்புஅறுக்கல்
உற்றார்க்கு உடம்பு மிகை.

6. யான்எனது என்னும் செருக்குஅறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்.

7. பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு.

8. தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

9. பற்றுஅற்ற கண்ணே பிறப்புஅறுக்கும் மற்று
நிலையாமை காணப் படும்.

10. பற்றுக பற்றுஅற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

1. பொருள்அல் லவற்றைப் பொருள்என்று உணரும்
மருளான் ஆர் மாணப் பிறப்பு.

2. இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

3. ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணியது உடைத்து.

4. ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயன்இன்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு.

5. எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

6. கற்றுஈண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றுஈண்டு வாரா நெறி.

7. ஓர்த்துஉள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்
பேர்த்துஉள்ள வேண்டா பிறப்பு.

8. பிறப்புஎன்னும் பேதைமை நீங்கச் சிறப்புஎன்னும்
செம்பொருள் காண்பது அறிவு.

9. சார்புஉணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றுஅழித்துச்
சார்தரா சார்தரும் நோய்.

10. காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்.

1. அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்புஈனும் வித்து.

2. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றுஅது
வேண்டாமை வேண்ட வரும்.

3. வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டுஇல்லை
யாண்டும் அஃதுஒப்பது இல்.

4. தூஉய்மை என்பது அவாஇன்மை மற்றுஅது
வாஅய்மை வேண்ட வரும்.

5. அற்றவர் என்பார் அவாஅற்றார் மற்றையார்
அற்றாக அற்றது இலர்.

6. அஞ்சுவது ஓரும் அறனே ஒருவனை
வஞ்சிப்பது ஓரும் அவா.

7. அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை
தான்வேண்டும் ஆற்றான் வரும்.

8. அவாஇல்லார்க்கு இல்லாகும் துன்பம் அஃதுண்டேல்,
தவாஅது மேன்மேல் வரும்.

9. இன்பம் இடைஅறாது ஈண்டும் அவாஎன்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.

10. ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்.

1. ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி.

2. பேதைப் படுக்கும் இழவூழ் அறிவுஅகற்றும்
ஆகல்ஊழ் உற்றக் கடை.

3. நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்.

4. இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு.

5. நல்லவை எல்லாஅம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு.

6. பரியினும் ஆகாவாம் பால்அல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம.

7. வகுத்தான் வகுத்த வகைஅல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.

8. துறப்பார்மன் துப்புரவு இல்லார் உறல்பால
ஊட்டா கழியும் எனின்.

9. நன்றுஆம்கால் நல்லவாக் காண்பவர் அன்றுஆம்கால்
அல்லல் படுவது எவன்?

10. ஊழின் பெருவலி யாவுள? மற்றுஒன்று
சூழினும் தான்முந் துறும்.

1. படைகுடி கூழ் அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு.

2. அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு.

3. தூங்காமை கல்வி துணிவுஉடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன் ஆள்பவற்கு.

4. அறன்இழுக்காது அல்லவை நீக்கி மறன்இழுக்கா
மானம் உடையது அரசு.

5. இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு.

6. காட்சிக்கு எளியன் கடும்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்.

7. இன்சொலால் ஈத்துஅளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண்டு அனைத்துஇவ் உலகு.

8. முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்.

9. செவிகைப்பச் சொல்பொறுக்கும் பண்புடை வேந்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு. [தன்

10. கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க்கு ஒளி.

1. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

2. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்இரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

3. கண்உடையர் என்பவர் கற்றோர் முகத்துஇரண்டு
புண்உடையர் கல்லா தவர்.

4. உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

5. உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்.

6. தொட்டுஅனைத்து ஊறும் மணல்கேணி மாந்தர்க்குக்
கற்றுஅனைத்து ஊறும் அறிவு.

7. யாதானும் நாடாமால் ஊராமால் என்ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு.

8. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து.

9. தாம்இன் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றுஅறிந் தார்.

10. கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்றை யவை.

1. அரங்குஇன்றி வட்டாடி அற்றே நிரம்பிய
நூல்இன்றிக் கோட்டி கொளல்.

2. கல்லாதான் சொல்கா முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று.

3. கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லாது இருக்கப் பெறின்.

4. கல்லாதான் ஒட்பம் கழியநன்று ஆயினும்
கொள்ளார் அறிவுடை யார்.

5. கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.

6. உளர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களர்அனையர் கல்லா தவர்.

7. நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று.

8. நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு.

9. மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு.

10. விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்.

1. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.

2. செவிக்குஉணவு இல்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்.

3. செவிஉணவில் கேள்வி உடையார் அவிஉணவின்
ஆன்றாரோடு ஒப்பர் நிலத்து.

4. கற்றிலன் ஆயினும் கேட்க அஃதுஒருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாம் துணை.

5. இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்.

6. எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

7. பிழைத்துஉணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்
ஈண்டிய கேள்வி யவர். [துணர்ந்து

8. கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி.

9. நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது.

10. செவியில் சுவைஉணரா வாய்உணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்?

1. அறிவுஅற்றம் காக்கும் கருவி; செறுவார்க்கும்
உள்அழிக்க லாகா அரண்.

2. சென்ற இடத்தால் செலவிடாது தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு.

3. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

4. எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு.

5. உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு.

6. எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு.

7. அறிவுஉடையார் ஆவது அறிவார் அறிவிலார்
அஃதுஅறி கல்லா தவர்.

8. அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்.

9. எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்.

10. அறிவுஉடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.

1. செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து.

2. இவறலும் மாண்புஇறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு.

3. தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்.

4. குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றம் தரூஉம் பகை.

5. வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

6. தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு.

7. செயற்பால செய்யாது இவறியான் செல்வம்
உயற்பாலது அன்றிக் கெடும்.

8. பற்றுஉள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்
எண்ணப் படுவதுஒன் றன்று.

9. வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை.

10. காதல காதல் அறியாமை உய்க்கிற் பின்
ஏதில ஏதிலார் நூல்.

1. அறன்அறிந்து மூத்த அறிவுஉடையார் கேண்மை
திறன்அறிந்து தேர்ந்து கொளல்.

2. உற்றநோய் நீக்கி உறுஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.

3. அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

4. தம்மில் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை.

5. சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.

6. தக்கார் இனத்தனாய்த் தான்ஒழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்தது இல்.

7. இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்கும் தகைமை யவர்.

8. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்.

9. முதல்இலார்க்கு ஊதியம் இல்லை மதலையாம்
சார்புஇல்லார்க்கு இல்லை நிலை.

10. பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

1. சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்.

2. நிலத்துஇயல்பால் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு
இனத்துஇயல்பதாகும் அறிவு.

3. மனத்தானாம் மாந்தர்க்கு உணர்ச்சி இனத்தானாம்
இன்னான் எனப்படும் சொல்.

4. மனத்து உளதுபோலக் காட்டி ஒருவற்கு
இனத்துஉள தாகும் அறிவு.

5. மனம்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனம்தூய்மை தூவா வரும்.

6. மனம்தூயார்க்கு எச்சம்நன் றாகும் இனம்தூயார்க்கு
இல்லைநன் றாகா வினை.

7. மனநலம் மன்உயிர்க்கு ஆக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும்.

8. மனநலம் நன்குஉடையர் ஆயினும் சான்றோர்க்கு
இனநலம் ஏமாப்பு உடைத்து.

9. மனநலத்தின் ஆகும் மறுமைமற்று அஃதும்
இனநலத்தின் ஏமாப்பு உடைத்து.

10. நல்இனத்தின் ஊங்கும் துணைஇல்லை தீஇனத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்.

1. அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்.

2. தெரிந்த இனத்தொடு தேர்ந்துஎண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதுஒன்றும் இல்.

3. ஆக்கம் கருதி முதல்இழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்.

4. தெளிவில் அதனைத் தொடங்கார் இளிவுஎன்னும்
ஏதப்பாடு அஞ்சு பவர்.

5. வகையறச் சூழாது எழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதுஓர் ஆறு.

6. செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.

7. எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

8. ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்.

9. நன்றுஆற்ற லுள்ளும் தவறுஉண்டு அவர்அவர்
பண்புஅறிந்து ஆற்றாக் கடை.

10. எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு
கொள்ளாத கொள்ளாது உலகு.

1. வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.

2. ஒல்வது அறிவது அறிந்துஅதன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல்.

3. உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்.

4. அமைந்துஆங்கு ஒழுகான் அளவுஅறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்

5. பீலிபெய் சாகாடும் அச்சுஇறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்.

6. நுனிக்கொம்பர் ஏறினார் அஃதுஇறந்து ஊக்கின்
உயிர்க்குஇறுதி ஆகி விடும்.

7. ஆற்றின் அளவுஅறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி.

8. ஆகாறு அளவுஇட்டிது ஆயினும் கேடுஇல்லை
போகாறு அகலாக் கடை.

9. அளவுஅறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

10. உளவரை தூக்காத ஒப்புரவு ஆண்மை
வளவரை வல்லைக் கெடும்.

1. பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

2. பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு.

3. அருவினை என்ப உளவோ கருவியால்
காலம் அறிந்து செயின்.

4. ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின்.

5. காலம் கருதி இருப்பர் கலங்காது
ஞாலம் கருது பவர்.

6. ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து.

7. பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்து
உள்வேர்ப்பர் ஒள்ளி யவர்.

8. செறுநரைக் காணில் சுமக்க இறுவரை
காணின் கிழக்காம் தலை.

9. எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற்கு அரிய செயல்.

10. கொக்குஒக்க கூம்பும் பருவத்து மற்றுஅதன்
குத்துஒக்க சீர்த்த இடத்து.

1. தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடம்கண்ட பின்அல் லது.

2. முரண்சேர்ந்த மொய்ம்பின்அவர்க்கும் அரண்
ஆக்கம் பலவும் தரும். [சேர்ந்துஆம்

3. ஆற்றாரும் ஆற்றி அடுப இடன்அறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின்.

4. எண்ணியார் எண்ணம் இழப்பர் இடன்அறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.

5. நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற.

6. கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்
நாவாயும் ஓடா நிலத்து.

7. அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தால் செயின்.

8. சிறுபடையான் செல்இடம் சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும்.

9. சிறைநலனும் சீரும் இலர்எனினும் மாந்தர்
உறைநிலத் தோடு ஒட்டல் அரிது.

10. கால்ஆழ் களரில் நரிஅடும் கண்அஞ்சா
வேலாள் முகத்த களிறு.

1. அறம்பொருள் இன்பம் உயிர்அச்சம் நான்கின்
திறம்தெரிந்து தேறப் படும்.

2. குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாண்உடையான் கட்டே தெளிவு.

3. அரியகற்று ஆசுஅற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மைஅரிதே வெளிறு.

4. குணம்நாடி குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

5. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.

6. அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றுஅவர்
பற்றுஇலர் நாணார் பழி.

7. காதன்மை கந்தா அறிவுஅறியார்த் தேறுதல்
பேதைமை எல்லாம் தரும்.

8. தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும்.

9. தேறற்க யாரையும் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள்.

10. தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்.

1. நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும்.

2. வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை.

3. அன்பு அறிவு தேற்றம் அவாஇன்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு.

4. எனைவகையால் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகும் மாந்தர் பலர்.

5. அறிந்துஆற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் வினைதான்
சிறந்தான்என்று ஏவற்பாற்று அன்று.

6. செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்.

7. இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல்.

8. வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரியன் ஆகச் செயல்.

9. வினைக்கண் வினையுடையான் கேண்மைவேறாக
நினைப்பானை நீங்கும் திரு.

10. நாள்தோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடாது உலகு.

1. பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள.

2. விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா
ஆக்கம் பலவும் தரும்.

3. அளவளாவு இல்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடுஇன்றி நீர்நிறைந் தற்று.

4. சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வம்தான்
பெற்றத்தால் பெற்ற பயன்.

5. கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப் படும்.

6. பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்
மருங்குடையார் மாநிலத்து இல்.

7. காக்கை கரவா கரைந்துஉண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள.

8. பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்.

9. தமராஆகித் தற்றுறந்தார் சுற்றம் அமராமைக்
காரணம் இன்றி வரும்.

10. உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்
இழைத்துஇருந்து எண்ணிக் கொளல்.

1. இறந்த வெகுளியின் தீதே சிறந்த
உவகை மகிழ்ச்சியின் சோர்வு.

2. பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை
நிச்ச நிரப்புக்கொன்றாங்கு.

3. பொச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை அதுஉலகத்து
எப்பான் நூலோர்க்கும் துணிவு.

4. அச்சம் உடையார்க்கு அரண்இல்லை ஆங்குஇல்லை
பொச்சாப்பு உடையார்க்கு நன்கு.

5. முன்உறக் காவாது இழுக்கியான் தன்பிழை
பின்ஊறு இரங்கி விடும்.

6. இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை
வாயின்அது ஒப்பது இல்.

7. அரியஎன்று ஆகாத இல்லைபொச் சாவாக்
கருவியால் போற்றிச் செயின்.

8. புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது
இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்.

9. இகழ்ச்சியில் கெட்டாரை உள்ளுக தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.

10. உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும்தான்
உள்ளியது உள்ளப் பெறின்.

1. ஓர்ந்துகண் ஓடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை.

2. வான்நோக்கி வாழும் உலகுஎல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி.

3. அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்.

4. குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.

5. இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு.

6. வேல்அன்று வென்றி தருவது மன்னவன்
கோல்அதூஉம் கோடாது எனின்.

7. இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்.

8. எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்
தண்பதத்தால் தானே கெடும்.

9. குடிபுறம் காத்துஓம்பிக் குற்றம் கடிதல்
வடுஅன்று வேந்தன் தொழில்.

10. கொலையில் கொடியாரை வேந்துஒறுத்தல் பைங்கூழ்
களைகட்டு அதனொடு நேர்.

1. கொலைமேற்கொண் டாரில் கொடிதே அலைமேற்
அல்லவை செய்துஒழுகும் வேந்து. [கொண்டு

2. வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு.

3. நாள்தோறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தோறும் நாடு கெடும்.

4. கூழும் குடியும் ஒருங்குஇழக்கும் கோல்கோடி
சூழாது செய்யும் அரசு.

5. அல்லல்பட்டு ஆற்றாது அழுதகண் ணீர்அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

6. மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதுஇன்றேல்
மன்னுவா மன்னர்க்கு ஒளி.

7. துளிஇன்மை ஞாலத்திற்கு எற்றுஅற்றே வேந்தன்
அளிஇன்மை வாழும் உயிர்க்கு.

8. இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா
மன்னவன் கோல்கீழ்ப் படின்.

9. முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்.

10. ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்.

1. தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து.

2. கடிது ஓச்சி மெல்ல எறிக- நெடிது ஆக்கம்
நீங்காமை வேண்டு பவர்.

3. வெருவந்த செய்துஒழுகும் வெங்கோலன் ஆயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும்.

4. இறைகடியன் என்றுஉரைக்கும் இன்னாச்சொல் வேந்
உறைகடுகி ஒல்லைக் கெடும். [தன்

5. அரும்செவ்வி இன்னா முகத்தான் பெரும்செல்வம்
பேஎய்கண்டு அன்னது உடைத்து.

6. கடும்சொல்லன் கண்ணிலன் ஆயின் நெடுஞ்செல்வம்
நீடுஇன்றி ஆங்கே கெடும்.

7. கடுமொழியும் கைஇகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம்.

8. இனத்தாற்றி எண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்
சீறின் சிறுகும் திரு.

9. செருவந்த போழ்தில் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும்.

10. கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுவல்லது
இல்லை நிலக்குப் பொறை.

1. கண்ணோட்டம் என்னும் கழிபெரும் காரிகை
உண்மையால் உண்டுஇவ் உலகு.

2. கண்ணோட்டத்து உள்ளது உலகியல் அஃதுஇலார்
உண்மை நிலக்குப் பொறை.

3. பண்என்னும் பாடற்கு இயைபுஇன்றேல் கண்என்னும்
கண்ணோட்டம் இல்லாத கண்.

4. உளபோல் முகத்தெவன் செய்யும் அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண்.

5. கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதுஇன்றேல்
புண்என்று உணரப் படும்.

6. மண்ணோடு இயைந்த மரத்தனையர் கண்ணோடு
இயைந்துகண் ணோடா தவர்.

7. கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர் கண்உடையார்
கண்ணோட்டம் இன்மையும் இல்.

8. கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்திவ் உலகு.

9. ஒறுத்துஆற்றும் பண்பினார் கண்ணும்கண் ணோடிப்
பொறுத்துஆற்றும் பண்பே தலை.

10. பெயக்கண்டும் நஞ்சுஉண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

1. ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்
தெற்றுஎன்க மன்னவன் கண்.

2. எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்அறிதல் வேந்தன் தொழில்.

3. ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்
கொற்றம் கொளக்கிடந்தது இல்.

4. வினைசெய்வார் தம்சுற்றம் வேண்டாதார் என்றுஆங்கு
அனைவரையும் ஆராய்வது ஒற்று.

5. கடாஅ உருவொடு கண்அஞ்சாது யாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று.

6. துறந்தார் படிவத்தர் ஆகி இறந்துஆராய்ந்து
என்செயினும் சோர்விலது ஒற்று.

7. மறைந்தவை கேட்கவற் றாகி அறிந்தவை
ஐயப்பாடு இல்லதே ஒற்று.

8. ஒற்றுஒற்றித் தந்த பொருளையும் மற்றும்ஓர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல்.

9. ஒற்றுஒற்று உணராமை ஆள்க உடன்மூவர்
சொல்தொக்க தேறப் படும்.

10. சிறப்புஅறிய ஒற்றின்கண் செய்யற்க செய்யின்
புறப்படுத்தான் ஆகும் மறை.

1. உடையர் எனப்படுவது ஊக்கம்அஃது இல்லார்
உடையது உடையரோ மற்று.

2. உள்ளம் உடைமை உடைமை பொருள்உடைமை
நில்லாது நீங்கி விடும்.

3. ஆக்கம் இழந்தேம்என்று அல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத்துஉடை யார்.

4. ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை.

5. வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு.

6. உள்ளுவது எல்லாம் உயர்வுஉள்ளல் மற்றுஅது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

7. சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதைஅம்பில்
பட்டுப்பாடு ஊன்றும் களிறு.

8. உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
ஒள்ளியம் என்னும் செருக்கு.

9. பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்.

10. உரம்ஒருவற்கு உள்ள வெறுக்கைஅஃது இல்லார்
மரமக்கள் ஆதலே வேறு.

1. குடிஎன்னும் குன்றா விளக்கம் மடிஎன்னும்
மாசுஊர மாய்ந்து கெடும்.

2. மடியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்.

3. மடிமடிக் கொண்டுஒழுகும் பேதை பிறந்த
குடிமடியும் தன்னினும் முந்து.

4. குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து
மாண்ட உஞற்றில வர்க்கு.

5. நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்.

6. படிஉடையார் பற்றுஅமைந்தக் கண்ணும்
மாண்பயன் எய்தல் அரிது. [மடிஉடையார்

7. இடிபுரிந்து எள்ளும்சொல் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட உஞற்றி லவர்.

8. மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு
அடிமை புகுத்தி விடும்.

9. குடிஆண்மை உள்வந்த குற்றம் ஒருவன்
மடிஆண்மை மாற்றக் கெடும்.

10. மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅயது எல்லாம் ஒருங்கு.

1. அருமை உடைத்துஎன்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

2. வினைக்கண் வினைகெடல் ஓம்புல் வினைக்குறை
தீர்ந்தாரின் தீர்ந்துஅன்று உலகு.

3. தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு.

4. தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்.

5. இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்துஊன்றும் தூண்.

6. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

7. மடிஉளாள் மாமுகடி என்ப மடிஇலான்
தாள்உளாள் தாமரையி னுள்.

8. பொறிஇன்மை யார்க்கும் பழிஅன்று அறிவுஅறிந்து
ஆள்வினை இன்மை பழி.

9. தெய்வத்தான் ஆகாதுஎனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

10. ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவுஇன்றித்
தாழாது உஞற்று பவர்.

1. இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்துஊர்வது அஃதுஒப்பது இல்.

2. வெள்ளத்து அனைய இடும்பை அறிவுஉடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்.

3. இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்.

4. மடுத்தவாய் எல்லாம் பகடுஅன்னான் உற்றம்
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து.

5. அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும்.

6. அற்றேம்என்று அல்லல் படுபவோ பெற்றேம்என்று
ஓம்புதல் தேற்றா தவர்.

7. இலக்கம் உடம்புஇடும்பைக்கு என்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதாம் மேல்.

8. இன்பம் விழையான் இடும்பை இயல்புஎன்பான்
துன்பம் உறுதல் இலன்.

9. இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன்.

10. இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகும்தன்
ஒன்னார் விழையும் சிறப்பு.

1. கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு.

2. வன்கண் குடிகாத்தல் கற்றுஅறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு.

3. பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்லது அமைச்சு.

4. தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு.

5. அறன்அறிந்து ஆன்றுஅமைந்த சொல்லான்எஞ்
திறன்அறிந்தான் தேர்ச்சித் துணை. [ஞான்றும்

6. மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாவுள முன்நிற் பவை.

7. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்.

8. அறிகொன்று அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன்.

9. பழுதுஎண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி உறும்.

10. முறைப்படச் சூழ்ந்து முடிவுஇலவே செய்வர்
திறப்பாடு இலாஅ தவர்.

1. நாநலம் என்னும் நலன்உடைமை அந்நலம்
யாநலத்து உள்ளதூஉம் அன்று.

2. ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்து ஓம்பல் சொல்லின்கண் சோர்வு.

3. கேட்டார்ப் பிணிக்கும் தகைஅவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்.

4. திறன்அறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனின்ஊங்கு இல்.

5. சொல்லுக சொல்லைப் பிறிதுஓர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து.

6. வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்
மாட்சியின் மாசுஅற்றார் கோள்.

7. சொலல்வல்லன் சோர்வுஇலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது.

8. விரைந்து தொழில்கேட்கும் ஞாலம்; நிரந்துஇனிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

9. பலசொல்லக் காமுறுவர் மன்றமாசு அற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்.

10. இணர்ஊழ்த்தும் நாறா மலர்அனையர் கற்றது
உணர விரித்துஉரையா தார்.

1. துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும்.

2. என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை.

3. ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னும் அவர்.

4. இடுக்கண் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்.

5. எற்றுஎன்று இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று.

6. ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

7. பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை.

8. கடிந்த கடிந்துஒரார் செய்தார்க்கு அவைதாம்
முடிந்தாலும் பீழை தரும்.

9. அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை.

10. சலத்தால் பொருள்செய்துஏ மார்த்தல் பசுமண்
கலத்துள்நீர் பெய்திரீஇ அற்று.

1. வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்;
மற்றைய எல்லாம் பிற.

2. ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறுஎன்பர் ஆய்ந்தவர் கோள்.

3. கடைக்கொட்கச் செய்தக்கது ஆண்மை இடைக்
எற்று விழுமம் தரும். [கொட்கின்

4. சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

5. வீறுஎய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
ஊறுஎய்தி உள்ளப் படும்.

6. எண்ணிய எண்ணியாங்கு எய்துப; எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.

7. உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்
அச்சாணி அன்னார் உடைத்து. [தேர்க்கு

8. கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல்.

9. துன்பம் உறவரினும் செய்க; துணிவுஆற்றி
இன்பம் பயக்கும் வினை.

10. எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டாது உலகு.

1. சூழ்ச்சி முடிவு துணிவுஎய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது.

2. தூங்குக தூங்கிச் செயற்பால; தூங்கற்க
தூங்காது செய்யும் வினை.

3. ஒல்லும்வாய் எல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்.

4. வினைபகை என்றுஇரண்டின் எச்சம் நினையும்கால்
தீஎச்சம் போலத் தெறும்.

5. பொருள்கருவி காலம் வினைஇடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்.

6. முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.

7. செய்வினை செய்வான் செயன்முறை அவ்வினை
உள்அறிவான் உள்ளம் கொளல்.

8. வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று.

9. நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல்.

10. உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறைபெறின்
கொள்வர் பெரியார்ப் பணிந்து.

1. அன்புஉடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்து
பண்புஉடைமை தூதுஉரைப்பான் பண்பு. [அவாம்

2. அன்புஅறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுஉரைப்
இன்றி அமையாத மூன்று. [பார்க்கு

3. நூலார்உள் நூல்வல்லன் ஆகுதல் வேலார்உள்
வென்றி வினைஉரைப்பான் பண்பு.

4. அறிவுஉருவு ஆராய்ந்த கல்விஇம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு.

5. தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாம் தூது.

6. கற்றுக்கண் அஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்
தக்கது அறிவதாம் தூது.

7. கடன்அறிந்து காலம் கருதி இடன்அறிந்து
எண்ணி உரைப்பான் தலை.

8. தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்
வாய்மை வழிஉரைப்பான் பண்பு.

9. விடுமாற்றம் வேந்தர்க்கு உரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன்.

10. இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு
உறுதி பயப்பதாம் தூது.

1. அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்துஒழுகு வார்.

2. மன்னர் விழைப விழையாமை மன்னரான்
மன்னிய ஆக்கம் தரும்.

3. போற்றின் அரியவை போற்றல் கடுத்தபின்
தேற்றுதல் யார்க்கும் அரிது.

4. செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்துஒழுகல்
ஆன்ற பெரியார் அகத்து.

5. எப்பொருளும் ஓரார் தொடரார்மற்று அப்பொருளை
விட்டக்கால் கேட்க மறை.

6. குறிப்புஅறிந்து காலம் கருதி வெறுப்புஇல
வேண்டுப வேட்பச் சொலல்.

7. வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றும்
கேட்பினும் சொல்லா விடல்.

8. இளையர் இனமுறையர் என்றுஇகழார் நின்ற
ஒளியொடு ஒழுகப் படும்.

9. கொளப்பட்டேம் என்றுஎண்ணிக் கொள்ளாத
துளக்கற்ற காட்சி யவர். [செய்யார்

10. பழையம் எனக்கருதிப் பண்பல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும்.

1. கூறாமை நோக்கிக் குறிப்புஅறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக்கு அணி.

2. ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோடு ஒப்பக் கொளல்.

3. குறிப்பின் குறிப்புஉணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்.

4. குறித்தது கூறாமைக் கொள்வரோடு ஏனை
உறுப்புஓர் அனையரால் வேறு.

5. குறிப்பின் குறிப்புஉணரா வாயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண்.

6. அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.

7. முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ? உவப்பினும்
காயினும் தான்முந் துறும்.

8. முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
உற்றது உணர்வார்ப் பெறின்.

9. பகைமையும் கேண்மையும் கண்உரைக்கும்
வகைமை உணர்வார்ப் பெறின். [கண்ணின்

10. நுண்ணியம் என்பார் அளக்கும்கோல் காணுங்கால்
கண் அல்லது இல்லை பிற.

1. அவைஅறிந்து ஆராய்ந்து சொல்லுக; சொல்லின்
தொகைஅறிந்த தூய்மை யவர்.

2. இடைதெரிந்து நன்குஉணர்ந்து சொல்லுக; சொல்
நடைதெரிந்த நன்மை யவர். [லின்

3. அவைஅறியார் சொல்லல்மேல் கொள்பவர் சொல்லின்
வகைஅறியார் வல்லதூஉம் இல்.

4. ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணம் கொளல்.

5. நன்றுஎன்ற வற்றுள்ளும் நன்றே; முதுவருள்
முந்து கிளவாச் செறிவு.

6. ஆற்றின் நிலைதளர்ந்து அற்றே வியன்புலம்
ஏற்றுஉணர்வார் முன்னர் இழுக்கு.

7. கற்றுஅறிந்தார் கல்வி விளங்கும் கசடுஅறச்
சொல்தெரிதல் வல்லார் அகத்து.

8. உணர்வது உடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந்து அற்று.

9. புல்அவையுள் பொச்சாந்தும் சொல்லற்க;
நன்கு செலச்சொல்லு வார். [நல்அவையுள்

10. அங்கணத்துள் உக்க அமிழ்துஅற்றுஆல்
அல்லார்முன் கோட்டி கொளல். [தம்கணத்தார்

1. வகைஅறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகைஅறிந்த தூய்மை யவர்.

2. கற்றருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார்.

3. பகைஅகத்துச் சாவார் எளியர் அரியர்
அவைஅகத்து அஞ்சா தவர்.

4. கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற
மிக்காருள் மிக்க கொளல்.

5. ஆற்றின் அளவுஅறிந்து கற்க அவைஅஞ்சா
மாற்றம் கொடுத்தல் பொருட்டு.

6. வாளொடுஎன் வன்கண்ணர் அல்லார்க்கு
நுண்அவை அஞ்சு பவர்க்கு. [நூலொடுஎன்

7. பகைஅகத்துப் பேடிகை ஒள்வாள் அவைஅகத்து
அஞ்சும் அவன்கற்ற நூல்.

8. பல்லவை கற்றும் பயமிலரே நல்அவையுள்
நன்கு செலச்சொல்லா தவர்.

9. கல்லா தவரின் கடைஎன்ப கற்றுஅறிந்து
நல்லார் அவைஅஞ்சு வார்.

10. உளர்எனினும் இல்லாரொடு ஒப்பர் களன்அஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தவர்.

1. தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு.

2. பெரும்பொருளால் பெட்டக்கது ஆகி அருங்கேட்
ஆற்ற விளைவது நாடு. [டால்

3. பொறைஒருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு
இறைஒருங்கு நேர்வது நாடு.

4. உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு.

5. பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்து
கொல்குறும்பும் இல்லது நாடு. [அலைக்கும்

6. கேடுஅறியாக் கெட்ட இடத்தும் வளம்குன்றா
நாடுஎன்ப நாட்டின் தலை.

7. இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்அரணும் நாட்டிற்கு உறுப்பு.

8. பிணிஇன்மை செல்வம் விளைவுஇன்பம் ஏமம்
அணிஎன்ப நாட்டிற்குஇவ் ஐந்து.

9. நாடுஎன்ப நாடா வளத்தன; நாடுஅல்ல
நாட வளம்தரு நாடு.

10. ஆங்குஅமைவு எய்தியக் கண்ணும் பயம்இன்றே;
வேந்துஅமைவு இல்லாத நாடு.

1. ஆற்று பவர்க்கும் அரண்பொருள், அஞ்சித்தன்
போற்று பவர்க்கும் பொருள்.

2. மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடையது அரண்.

3. உயர்வுஅகலம் திண்மை அருமைஇன் நான்கின்
அமைவுஅரண் என்றுஉரைக்கும் நூல்.

4. சிறுகாப்பின் பேர்இடத்தது ஆகி உறுபகை
ஊக்கம் அழிப்பது அரண்.

5. கொளற்குஅரிதாய்க் கொண்டகூழ்த்துஆகி அகத்தார்
நிலைக்குஎளிதாம் நீரது அரண்.

6. எல்லாப் பொருளும் உடைத்தாய் இடத்துஉதவும்
நல்லாள் உடையது அரண்.

7. முற்றியும் முற்றாது எறிந்தும் மறைப்படுத்தும்
பற்றற்கு அரியது அரண்.

8. முற்றுஆற்றி முற்றி யவரையும் பற்றுஆற்றிப்
பற்றியார் வெல்வது அரண்.

9. முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறுஎய்தி மாண்டது அரண்.

10. எனைமாட்சித்து ஆகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் இல்லது அரண்.

1. பொருள்அல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருள்அல்லது இல்லை பொருள்.

2. இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு.

3. பொருள்என்னும் பொய்யா விளக்கம் இருள்அறுக்
எண்ணிய தேயத்துச் சென்று. [கும்

4. அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறன்அறிந்து
தீதுஇன்றி வந்த பொருள்.

5. அருளொடும் அன்பொடும் வாராப் பொருள்ஆக்கம்
புல்லார் புரள விடல்.

6. உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்.

7. அருள்என்னும் அன்புஈன் குழவி பொருள்என்னும்
செல்வச் செவிலியால் உண்டு.

8. குன்றுஏறி யானைப்போர் கண்டுஅற்றால் தன்கைத்து
உண்டாகச் செய்வான் வினை. [ஒன்று

9. செய்க பொருளைச் செறுநர் செருக்குஅறுக்கும்
எஃகுஅதனின் கூரியது இல்.

10. ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு.

1. உறுப்புஅமைந்து ஊறுஅஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையுள் எல்லாம் தலை.

2. உலைவிடத்து ஊறுஅஞ்சா வன்கண் தொலைவிடத்
தொல்படைக்கு அல்லால் அரிது. [துத்

3. ஒலித்தக்கால் என்னும் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும்.

4. அழிவுஇன்று அறைபோகாது ஆகி வழிவந்த
வன்கண் அதுவே படை.

5. கூற்றுஉடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்றல் அதுவே படை.

6. மறம்மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு.

7. தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்கும் தன்மை அறிந்து.

8. அடல்தகையும் ஆற்றலும் இல்எனினும் தானை
படைத்தகையால் பாடு பெறும்.

9. சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்
இல்ஆயின் வெல்லும் படை.

10. நிலைமக்கள் சால உடைத்துஎனினும் தானை
தலைமக்கள் இல்வழி இல்.

1. என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலர்என்னை
முன்நின்று கல்நின் றவர்.

2. கான முயல்எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது.

3. பேர்ஆண்மை என்ப தறுகண்ஒன்று உற்றக்கால்
ஊர்ஆண்மை மற்றுஅதன் எஃகு.

4. கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.

5. விழித்தகண் வேல்கொண்டு எறிய அழித்துஇமைப்
ஒட்டுஅன்றோ வன்கண் அவர்க்கு. [பின்

6. விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்கும்தன் நாளை எடுத்து.

7. சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து.

8. உறின்உயிர் அஞ்சா மறவர் இறைவன்
செறினும்சீர் குன்றல் இலர்.

9. இழைத்தது இகவாமைச் சாவாரை யாரே
பிழைத்தது ஒறுக்கிற் பவர்.

10. புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து.

1. செயற்குஅரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்குஅரிய யாவுள காப்பு.

2. நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு.

3. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புஉடை யாளர் தொடர்பு.

4. நகுதல் பொருட்டுஅன்று நட்டல் மிகுதிக்கண்
மேல்சென்று இடித்தல் பொருட்டு.

5. புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்புஆம் கிழமை தரும்.

6. முகநக நட்பது நட்புஅன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு.

7. அழிவின் அவைநீக்கி ஆறுஉய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு.

8. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

9. நட்பிற்கு வீற்றிருக்கை யாதுஎனின் கொட்பு
இன்றி ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.

10. இனையர் இவர்எமக்கு இன்னம்யாம் என்று
புனையினும் புல்என்னும் நட்பு.

1. நாடாது நட்டலின் கேடுஇல்லை நட்டபின்
வீடுஇல்லை நட்புஆள் பவர்க்கு.

2. ஆய்ந்துஆய்ந்து கொள்ளாதான் கேண்மை கடை
தான்சாம் துயரம் தரும். [முறை

3. குணனும் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்துயாக்க நட்பு.

4. குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு.

5. அழச்சொல்லி அல்லது இடித்து வழக்குஅறிய
வல்லார்நட்பு ஆய்ந்து கொளல்.

6. கேட்டினும் உண்டுஓர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்.

7. ஊதியம் என்பது ஒருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல்.

8. உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க
அல்லல்கண் ஆற்றுஅறுப்பார் நட்பு.

9. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளம் சுடும்.

10. மருவுக மாசுஅற்றார் கேண்மை; ஒன்றுஈத்தும்
ஒருவுக ஒப்புஇலார் நட்பு.

1. பழைமை எனப்படுவது யாதுஎனின் யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.

2. நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை; மற்றுஅதற்கு
உப்பாதல் சான்றோர் கடன்.

3. பழகிய நட்புஎவன் செய்யும்? கெழுதகைமை
செய்தாங்கு அமையாக் கடை.

4. விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையால்
கேளாது நட்டார் செயின்.

5. பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுஉணர்க
நோதக்க நட்டார் செயின்.

6. எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவுஇடத்தும்
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு.

7. அழிவந்த செய்யினும் அன்புஅறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

8. கேள்இழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாள்இழுக்கம் நட்டார் செயின்.

9. கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு.

10. விழையார் விழையப் படுப பழையார்கண்
பண்பின் தலைப்பிரியா தார்.

81

1. பருகுவார் போலினும் பண்புஇலார் கேண்மை
பெருகலின் குன்றல் இனிது.

2. உறின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்புஇலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்?

3. உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர்.

4. அமர்அகத்து ஆற்றுஅறுக்கும் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை.

5. செய்துஏமம் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று.

6. பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்
ஏதின்மை கோடி உறும்.

7. நகைவகையர் ஆகிய நட்பின் பகைவரால்
பத்துஅடுத்த கோடி உறும்.

8. ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல்.

9. கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு.

10. எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ
மன்றில் பழிப்பார் தொடர்பு.

1. சீர்இடம் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு.

2. இனம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்.

3. பலநல்ல கற்றக் கடைத்தும் மனநல்லர்
ஆகுதல் மாணார்க்கு அரிது.

4. முகத்தின் இனிய நகாஅ அகத்துஇன்னா
வஞ்சரை அஞ்சப் படும்.

5. மனத்தின் அமையா தவரை எனைத்துஒன்றும்
சொல்லினால் தேறற்பாற்று அன்று.

6 நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்
ஒல்லை உணரப் படும்.

7. சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க;வில்
தீங்கு குறித்தமை யான். [வணக்கம்

8. தொழுதகை உள்ளும் படைஒடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து.

9. மிகச்செய்து தம்எள்ளு வாரை நகச்செய்து
நட்பினுள் சாப்புல்லற் பாற்று.

10. பகைநட்பாம் காலம் வரும்கால் முகநட்டு
அகநட்பு ஒரீஇ விடல்.

1. பேதைமை என்பதுஒன்று யாதுஎனின் ஏதம்
ஊதியம் போக விடல். [கொண்டு

2. பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை
கைஅல்ல தன்கண் செயல்.

3. நாணாமை நாடாமை நாரின்மை யாதுஒன்றும்
பேணாமை பேதை தொழில்.

4. ஓதி உணர்ந்தும் பிறர்க்குஉரைத்தும் தான்அடங்காப்
பேதையின் பேதையார் இல்.

5. ஒருமைச் செயல்ஆற்றும் பேதை எழுமையும்
தான்புக்கு அழுந்தும் அளறு.

6. பொய்படும் ஒன்றோ புனைபூணும் கைஅறியாப்
பேதை வினைமேல் கொளின்.

7. ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெரும்செல்வம் உற்றக் கடை.

8. மையல் ஒருவன் களித்துஅற்றுஆல் பேதைதன்
கைஒன்று உடைமை பெறின்.

9. பெரிதுஇனிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதுஒன்று இல்.

10. கழாஅக்கால் பள்ளியுள் வைத்துஅற்றுஆல் சான்
குழாஅத்துப் பேதை புகல். [றோர்

1. அறிவுஇன்மை இன்மையுள் இன்மை பிறிதுஇன்மை
இன்மையா வையாது உலகு.

2. அறிவுஇலான் நெஞ்சுஉவந்து ஈதல் பிறிதுயாதும்
இல்லை பெறுவான் தவம்.

3. அறிவுஇலார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது.

4. வெண்மை எனப்படுவது யாதுஎனின்? ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு.

5. கல்லாத மேல்கொண்டு ஒழுகல் கசடற
வல்லதூஉம் ஐயம் தரும்.

6. அற்றம் மறைத்தலோ புல்அறிவு தம்வயின்
குற்றம் மறையா வழி.

7. அருமறை சோரும் அறிவுஇலான் செய்யும்
பெரும்இறை தானே தனக்கு.

8. ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்உயிர்
போஒம் அளவும்ஓர் நோய்.

9. காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானும் தான்கண்ட வாறு.

10. உலகத்தார் உண்டுஎன்பது இல்என்பான் வையத்து
அலகையா வைக்கப் படும்.

1. இகல்என்ப எல்லா உயிர்க்கும் பகல் என்னும்
பண்புஇன்மை பாரிக்கும் நோய்.

2. பகல்கருதிப் பற்ரு செயினும் இகல்கருதி
இன்னுசெய் யாமை தலை.

3. இகல்என்னும் எவ்வநோய் நீக்கின் தவல்இல்லாத்
தாவில் விளக்கம் தரும்.

4. இன்பத்துள் இன்பம் பயக்கும் இகல்என்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.

5. இகல்எதிர் சாய்ந்துஒழுக வல்லாரை யாரே
மிகல்ஊக்கும் தன்மை யவர்.

6. இகலின் மிகல்இனிது என்பவன் வாழ்க்கை
தவலும் கெடலும் நணித்து.

7. மிகன்மேவன் மெய்ப்பொருள் காணுர் இகன்மேவல்
இன்னு அறிவி னவர்.

8. இகலிற்கு எதிர்சாய்தல் ஆக்கம் அதனை
மிகல்ஊக்கின் ஊக்குமாம் கேடு.

9. இகல்காணுன் ஆக்கம் வருங்கால் அதனை
மிகல்காணும் கேடு தரற்கு.

10. இகலான்ஆம் இன்னுத எல்லாம் நகலான்ஆம்
நன்னயம் என்னும் செருக்கு.

1. வலியார்க்கு மாறுஏற்றல்-ஓம்புக; ஓம்பா
மெலியார்மேல் மேக பகை.

2. அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்துவ்வான்
என்பரியும் ஏதிலான் துப்பு.

3. அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்
தஞ்சம் எளியன் பகைக்கு.

4. நீங்கான் வெகுளி நிறையிலன் எஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கும் எளிது.

5. வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்
பண்பிலன் பற்றார்க்கு இனிது. [கான்

6. காணாச் சினத்தான் கழிபெரும் காமத்தான்
பேணாமை பேணப் படும்.

7. கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்துஇருந்
மாணாத செய்வான் பகை. [து

8. குணன்இலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்கு
இனன்இலனாம் ஏமாப்பு உடைத்து.

9. செறுவார்க்குச் சேண்இகவா இன்பம் அறிவுஇலா
அஞ்சும் பகைவர்ப் பெறின்.

10. கல்லான் வெகுளும் சிறுபொருள் எஞ்ஞான்றும்
ஒல்லானை ஒல்லாது ஒளி.

1. பகைஎன்னும் பண்பில் அதனை ஒருவன்
நகையேயும் வேண்டல்பாற்று அன்று.

2. வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை.

3. ஏமுற்ற அவரினும் ஏழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன்.

4. பகைநட்பாக் கொண்டுஒழுகும் பண்புஉடை யாளன்
தகைமைக்கண் தங்கிற்று உலகு.

5. தன்துணை இன்றால் பகைஇரண்டால் தான்ஒரு
இன்துணையாக் கொள்கஅவற்றின் ஒன்று. [வன்

6. தேறினும் தேறா விடினும் அழிவின்கண்
தேறான் பகாஅன் விடல்.

7. நோவற்க நொந்தது அறியார்க்கு மேவற்க
மென்மை பகைவர் அகத்து.

8. வகைஅறிந்து தன்செய்து தன்காப்ப மாயும்
பகைவர்கண் பட்ட செருக்கு.

9. இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.

10. உயிர்ப்ப உளர்அல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார்.

1. நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்
இன்னாவாம் இன்னா செயின்.

2. வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

3. உள்பகை அஞ்சித்தன் காக்க உலைவிடத்து
மண்பகையின் மாணத் தெறும்.

4. மனமாணா உள்பகை தோன்றின் இனமாணா
ஏதம் பலவும் தரும்.

5. உறன்முறையான் உள்பகை தோன்றின் இறல்முறை
ஏதம் பலவும் தரும். [யான்

6. ஒன்றாமை ஒன்றியார் கண்படின் எஞ்ஞான்றும்
பொன்றாமை ஒன்றல் அரிது.

7. செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே
உள்பகை உற்ற குடி.

8. அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொருது
உள்பகை உற்ற குடி.

9. எள்பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும்
உள்பகை உள்ளதாம் கேடு.

10. உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன்உறைந்து அற்று.

1. ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலுள் எல்லாம் தலை.

2. பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால்
பேரா இடும்பை தரும்.

3. கெடல்வேண் டின் கேளாது செய்க; அடல்வேண்
ஆற்று பவர்கண் இழுக்கு. [டின்

4. கூற்றத்தைக் கையால் விளித்துஅற்றால் ஆற்று
ஆற்றாதார் இன்னா செயல். [வார்க்கு

5. யாண்டுச்சென்று யாண்டும் உளர்ஆகார் வெந்
வேந்து செறப்பட் டவர். [துப்பின்

6. எரியால் சுடப்படினும் உய்வுஉண்டாம்; உய்யார்
பெரியார்ப் பிழைத்துஒழுகு வார்.

7. வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்
தகைமாண்ட தக்கார் செறின். [ஆம்

8. குன்றுஅன்னார் குன்ற மதிப்பின் குடியொடு
நின்றுஅன்னார் மாய்வர் நிலத்து.

9. ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வெந்து கெடும்.

10. இறந்துஅமைந்த சார்புஉடையர் ஆயினும் உய்
சிறந்துஅமைந்த சீரார் செறின். [யார்

1. மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழை
வேண்டாப் பொருளும் அது. [வார்

2. பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்
நாணாக நாணுத் தரும்.

3. இல்லாள்கண் தாழ்ந்த இயல்புஇன்மை எஞ்ஞான்
நல்லார்உள் நாணுத் தரும். [றும்

4. மனையாளை அஞ்சும் மறுமைஇ லாளன்
வினைஆள்மை வீறுஎய்தல் இன்று.

5. இல்லாளை அஞ்சுவான் அஞ்சும்மற்று எஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல்.

6. இமையாரின் வாழினும் பாடுஇலரே இல்லாள்
அமையார்தோள் அஞ்சு பவர்.

7. பெண்ஏவல் செய்துஒழுகும் ஆண்மையின் நாண்
பெண்ணே பெருமை உடைத்து. [உடைப்

8. நட்டார் குறைமுடியார் நன்றுஆற்றார் நன்னுதலாள்
பெட்டாங்கு ஒழுகு பவர்.

9. அறிவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்
பெண்ஏவல் செய்வார்கண் இல்.

10. எண்சேர்ந்த நெஞ்சத்து இடன்உடையார்க்கு
பெண்சேர்ந்துஆம் பேதைமை இல். [எஞ்ஞான்றும்

## அதிகாரம் 92.] [வரைவின் மகளிர்.

1. அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடி
இன்சொல் இழுக்குத் தரும். [யார்

2. பயன்தூக்கிப் பண்புஉரைக்கும் பண்புஇல் மகளிர்
நயன்தூக்கி நள்ளா விடல்.

3. பொருள்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டு
ஏதில் பிணம்தழீஇ அற்று. [அறையில்

4. பொருள்பொருளார் புன்னலம் தோயார் அருட்
ஆயும் அறிவி னவர். [பொருள்

5. பொதுநலத்தார் புன்னலம் தோயார் மதிநலத்தின்
மாண்ட அறிவி னவர்.

6. தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள்.

7. நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறநெஞ்சின்
பேணிப் புணர்பவர் தோள்.

8. ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்குஎன்ப
மாய மகளிர் முயக்கு.

9. வரைவிலா மாண்இழையார் மென்தோள் புரை
பூரியர்கள் ஆழும் அளறு. [இலாப்

10. இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு.

1. உட்கப் படாஅர் ஒளிஇழப்பர் எஞ்ஞான்றும்
கள்காதல் கொண்டுஒழுகு வார்.

2. உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்
எண்ணப் படவேண்டா தார்.

3. ஈன்றாள் முகத்தேயும் இன்னாதுஆல் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி.

4. நாண்என்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்என்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு.

5. கைஅறி யாமை உடைத்தே பொருள்கொடுத்து
மெய்அறி யாமை கொளல்.

6. துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுஉண்பார் கள்உண் பவர்.

7. உள்ஒற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
கள்ஒற்றிக் கண்சாய் பவர்.

8. களித்துஅறியேன் என்பது கைவிடுக; நெஞ்சத்து
ஒளித்ததூஉம் ஆங்கே மிகும்.

9. களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ அற்று.

10. கள்உண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு.

1. வேண்டற்க வென்றிடினும் சூதினை; வென்றதூஉம்
தூண்டில்பொன் மீன்விழுங்கி அற்று.

2. ஒன்றுஎய்தி நூறுஇழக்கும் சூதர்க்கும் உண்டாம்
நன்றுஎய்தி வாழ்வதோர் ஆறு? [கொல்

3. உருள்ஆயம் ஓவாது கூறின் பொருள்ஆயம்
போஒய்ப் புறமே படும்.

4. சிறுமை பலசெய்து சீர்இழக்கும் சூதின்
வறுமை தருவதுஒன்று இல்.

5. கவறும் கழகமும் கையும் தருக்கி
இவறியார் இல்லாகி யார்.

6. அகடுஆரார் அல்லல் உழப்பர்சூது என்னும்
முகடியான் மூடப்பட் டார்.

7. பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்.

8. பொருள்கெடுத்துப் பொய்மேல் கொளீஇ அருள்
அல்லல் உழப்பிக்கும் சூது. [கெடுத்து

9. உடைசெல்வம் ஊண்ஒளி கல்விஎன்று ஐந்தும்
அடையாவாம் ஆயம் கொளின்.

10. இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்
உழத்தொறூஉம் காதற்று உயிர்.

1. மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று.

2. மருந்துஎன வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்.

3. அற்றால் அளவுஅறிந்து உண்க; அஃதுஉடம்பு
பெற்றான் நெடிதுஉய்க்கும் ஆறு.

4. அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறுஅல்ல
துய்க்க துவரப் பசித்து.

5. மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துஉண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு.

6. இழிவுஅறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய்.

7. தீஅளவு அன்றித் தெரியான் பெரிதுஉண்ணின்
நோய்அளவு இன்றிப் படும்.

8. நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

9. உற்றான் அளவும் பிணிஅளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்.

10. உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வான்
அப்பால்நால் கூற்றே மருந்து. [என்று

1. இல்பிறந்தார் கண்அல்லது இல்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு.

2. ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார்.

3. நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு.

4. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

5. வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பின் தலைப்பிரிதல் இன்று.

6. சலம்பற்றிச் சால்புஇல செய்யார்;மாசு அற்ற
குலம்பற்றி வாழ்தும்என் பார்.

7. குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து.

8. நலத்தின்கண் நார்இன்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும்.

9. நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்.

10. நலம்வேண்டின் நாண்உடைமை வேண்டும் குலம்
வேண்டுக யார்க்கும் பணிவு. [வேண்டின்

1. இன்றி அமையாச் சிறப்பின ஆயினும்
குன்ற வருப விடல்.

2. சீரினும் சீர்அல்ல செய்யாரே சீரொடு
பேர்ஆண்மை வேண்டு பவர்.

3. பெருக்கத்து வேண்டும் பணிதல்; சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு.

4. தலையின் இழிந்த மயிர்அனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை.

5. குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின்.

6. புகழ்இன்றுஆல் புத்தேள்நாடு உய்யாதால் என்
இகழ்வார்பின் சென்று நிலை. [மற்று

7. ஒட்டார்பின் சென்றுஒருவன் வாழ்தலின் அந்நிலை
கெட்டான் எனப்படுதல் நன்று. [யே

8. மருந்தோமற்று ஊன் ஓம்பும் வாழ்க்கை பெரும்
பீடுஅழிய வந்த இடத்து. [தகைமை

9. மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்.

10. இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழுது ஏத்தும் உலகு.

1. ஒளிஒருவற்கு உள்ள வெறுக்கை; இளிஒருவற்கு
அஃதுஇறந்து வாழ்தும் எனல்.

2. பிறப்புஒக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்புஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

3. மேல்இருந்தும் மேல்அல்லார் மேல்அல்லர்; கீழ்இருந்
கீழ்அல்லார் கீழ்அல் லவர். [தும்

4. ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டுஒழுகின் உண்டு.

5. பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்.

6. சிறியார் உணர்ச்சியுள் இல்லைப் பெரியாரைப்
பேணிக்கொள் வேம்என்னும் நோக்கு.

7. இறப்பே புரிந்த தொழிற்றாம் சிறப்பும்தான்
சீர்அல் லவர்கண் படின்.

8. பணியுமாம் என்றும் பெருமை; சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து.

9. பெருமை பெருமிதம் இன்மை; சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல்.

10. அற்றம் மறைக்கும் பெருமை; சிறுமைதான்
குற்றமே கூறி விடும்.

1. கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

2. குணநலம் சான்றோர் நலனே; பிறநலம்
எந்நலத்து உள்ளதூஉம் அன்று.

3. அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண்.

4. கொல்லா நலத்தது நோன்மை; பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.

5. ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை.

6. சால்பிற்குக் கட்டளை யாதுஎனின் தோல்வி
துலைஅல்லார் கண்ணும் கொளல்.

7. இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு?

8. இன்மை ஒருவர்க்கு இளிவுஅன்று சால்புஎன்னும்
திண்மைஉண் டாகப் பெறின்.

9. ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்.

10. சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலம்தான்
தாங்காது மன்னோ பொறை.

1. எண்பதத்தால் எய்தல் எளிதுஎன்ப யார்மாட்டும்
பண்புஉடைமை என்னும் வழக்கு.

2. அன்புஉடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்இரண்டும்
பண்புஉடைமை என்னும் வழக்கு.

3. உறுப்புஒத்தல் மக்கள்ஒப்பு அன்றால்; வெறுத்தக்க
பண்புஒத்தல் ஒப்பதாம் ஒப்பு.

4. நயனொடு நன்றி புரிந்த பயன்உடையார்
பண்புபா ராட்டும் உலகு.

5. நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி; பகையுள்ளும்
பண்புஉள பாடுஅறிவார் மாட்டு.

6. பண்புஉடையார் பட்டுஉண்டு உலகம் அதுஇன்
மண்புக்கு மாய்வது மன். [றேல்

7. அரம்போலும் கூர்மையர் ஏனும் மரம்போல்வர்
மக்கள்பண்பு இல்லா தவர்.

8. நண்புஆற்றார் ஆகி நயமில செய்வார்க்கும்
பண்புஆற்றார் ஆதல் கடை.

9. நகல்வல்லர் அல்லார்க்கு மாஇரு ஞாலம்
பகலும்பால் பட்டுஅன்று இருள்.

10. பண்புஇலான் பெற்ற பெரும்செல்வம் நன்பால்
கலம்தீமை யால்திரிந்து அற்று.

1. வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃது
செத்தான் செயக்கிடந்தது இல். [உண்ணான்

2. பொருளான்ஆம் எல்லாம்என்று ஈயாது இவறும்
மருளான்ஆம் மாணாப் பிறப்பு.

3. ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை.

4. எச்சம்என்று என்எண்ணும் கொல்லோ ஒருவரால்
நச்சப் படாஅ தவன்.

5. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்
கோடிஉண் டாயினும் இல். [கிய

6. ஏதம் பெரும்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்கு
ஈதல் இயல்பிலா தான். [ஒன்று

7. அற்றார்க்குஒன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று.

8. நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று.

9. அன்புஒரீஇத் தன்செற்று அறன்நோக்காது ஈட்டிய
ஒண்பொருள் கொள்வார் பிறர்.

10. சீர்உடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறம்கூர்ந்து அனையது உடைத்து.

1. கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற.

2. ஊண்உடை எச்சம் உயிர்க்குஎல்லாம் வேறுஅல்ல
நாண்உடைமை மாந்தர் சிறப்பு.

3. ஊனைக் குறித்த உயிர்எல்லாம் நாண்என்னும்
நன்மை குறித்தது சால்பு.

4. அணிஅன்றோ நாண்உடைமை சான்றோர்க்கு அஃதுஇன்றேல்
பிணிஅன்றோ பீடு நடை.

5. பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு
உறைபதி என்னும் உலகு.

6. நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர்.

7. நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாண்ஆள் பவர்.

8. பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்
அறம்நாணத் தக்கது உடைத்து.

9. குலம்சுடும் கொள்கை பிழைப்பின் நலம்சுடும்
நாண்இன்மை நின்றக் கடை.

10. நாண்அகத்து இல்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி அற்று.

1. கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுஉடையது இல்.

2. ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி.

3. குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந்து உறும்.

4. சூழாமல் தானே முடிவுஎய்தும் தன்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு.

5. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

6. நல்ஆண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த
இல்ஆண்மை ஆக்கிக் கொளல்.

7. அமர்அகத்து வன்கண்ணர் போலத் தமர்அகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை.

8. குடிசெய்வார்க்கு இல்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக் கெடும்.

9. இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்
குற்றம் மறைப்பான் உடம்பு. [தைக்

10. இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்துஊன்றும்
நல்லாள் இலாத குடி.

1. சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

2. உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து.

3. உழுதுஉண்டு வாழ்வாரே வாழ்வார்;மற்று எல்லாம்
தொழுதுஉண்டு பின்செல் பவர்.

4. பலகுடை நீழலும் தம்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்.

5. இரவார் இரப்பார்க்குஒன்று ஈவர் கரவாது
கைசெய்துஊண் மாலை யவர்.

6. உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கு நிலை.

7. தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்துஎருவும்
வேண்டாது சாலப் படும்.

8. ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்
நீரினும் நன்றுஅதன் காப்பு.

9. செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்.

10. இலம்என்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலம்என்னும் நல்லாள் நகும்.

1. இன்மையின் இன்னாதது யாதுஎனின் இன்மையின்
இன்மையே இன்னா தது.

2. இன்மை எனஒரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும்.

3. தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக
நல்குரவு என்னும் நசை.

4. இல்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த
சொல்பிறக்கும் சோர்வு தரும்.

5. நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்.

6. நல்பொருள் நன்குஉணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொல்பொருள் சோர்வு படும்.

7. அறன்சாரா நல்குரவு ஈன்றது ஆயினும்
பிறன்போல நோக்கப் படும்.

8. இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு.

9. நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதுஒன்றும் கண்பாடு அரிது.

10. துப்புரவு இல்லார் துவரத் துறவாமை
உப்பிற்கும் காடிக்கும் கூற்று.

1. இரக்க இரத்தக்கார்க் காணின் கரப்பின்
அவர்பழி தம்பழி அன்று.

2. இன்பம் ஒருவற்கு இரத்தல் இரந்தவை
துன்பம் உறாஅ வரின்.

3. கரப்புஇலா நெஞ்சின் கடன்அறிவார் முன்நின்று
இரப்பும்ஓ ரேஎர் உடைத்து.

4. இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்
கனவிலும் தேற்றாதார் மாட்டு.

5. கரப்புஇலார் வையகத்து உண்மையான் கண்ணின்று
இரப்பவர் மேற்கொள் வது.

6. கரப்புஇடும்பை இல்லாரைக் காணின் நிரப்புஇடும்பை
எல்லாம் ஒருங்கு கெடும்.

7. இகழ்ந்துஎள்ளாது ஈவாரைக் காணின் மகிழ்ந்துஉள்ளம்
உள்உள் உவப்பது உடைத்து.

8. இரப்பாரை இல்ஆயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று.

9. ஈவார்கண் என்உண்டாம் தோற்றம் இரந்துகோள்
மேவார் இலாஅக் கடை.

10. இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்புஇடும்பை
தானேயும் சாலும் கரி.

1. கரவாது உவந்துஈயும் கண்அன்னர் கண்ணும்
இரவாமை கோடி உறும்.

2. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகுஇயற்றி யான்.

3. இன்மை இடும்பை இரந்துதீர் வாம்என்னும்
வன்மையின் வன்பாட்டது இல்.

4. இடம்எல்லாம் கொள்ளாத் தகைத்தே இடம்இல்லாக்
காலும் இரவுஒல்லாச் சால்பு.

5. தெண்நீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்தது
உண்ணலின் ஊங்குஇனியது இல்.

6. ஆவிற்கு நீர்என்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்தது இல்.

7. இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்
கரப்பார் இரவன்மின் என்று.

8. இரவுஎன்னும் ஏமாப்பில் தோணி கரவுஎன்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

9. இரவுஉள்ள உள்ளம் உருகும்; கரவுஉள்ள
உள்ளதூஉம் இன்றிக் கெடும்.

10. கரப்பவர்க்கு யாங்குஒளிக்கும் கொல்லோ இரப்பவர்
சொல்ஆடப் போஒம் உயிர்.

1. மக்களே போல்வர் கயவர் அவர்அன்ன
ஒப்பாரி யாம்கண்டது இல்.

2. நன்றுஅறி வாரின் கயவர் திருஉடையார்
நெஞ்சத்து அவலம் இலர்.

3. தேவர் அனையர் கயவர் அவரும்தாம்
மேவன செய்துஒழுக லான்.

4. அகப்பட்டி ஆவாரைக் காணின் அவரின்
மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ்.

5. அச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம்
அவாஉண்டேல் உண்டாம் சிறிது.

6. அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க்கு உய்த்துஉரைக்க லான்.

7. ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுஉடைக்கும்
கூன்கையர் அல்லா தவர்க்கு.

8. சொல்லப் பயன்படுவர் சான்றோர்; கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்.

9. உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்றாகும் கீழ்.

10. எற்றிற்கு உரியர் கயவர்ஒன்று உற்றக்கால்
விற்றற்கு உரியர் விரைந்து.

## அதிகாரம் 109.][தகைஅணங்குஉறுத்தல்.

1. அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனம்குழை
மாதர்கொல் மாலும்என் நெஞ்சு.
2. நோக்கினாள் நோக்குஎதிர் நோக்குதல் தாக்குஅணங்
தானைக்கொண்டு அன்னது உடைத்து. [கு
3. பண்டுஅறியேன் கூற்றுஎன் பதனை இனிஅறிந்தேன்
பெண்தகையால் பேர்அமர்க் கட்டு.
4. கண்டார் உயிர்உண்ணும் தோற்றத்தால் பெண்
பேதைக்கு அமர்த்தன கண். [தகைப்
5. கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம்இம் மூன்றும் உடைத்து.
6. கொடும்புருவம் கோடா மறைப்பின் நடுங்குஅஞர்
செய்யல மன்இவள் கண்.
7. கடாஅக் களிற்றின்மேல் கண்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில்.
8. ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்கும்என் பீடு.
9. பிணைஏர் மடநோக்கும் நாணும் உடையாட்கு
அணிஎவனோ ஏதில தந்து.
10. உண்டார்கண் அல்லது அடுநறாக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று.

1. இருநோக்கு இவள்உண்கண் உள்ளது; ஒருநோக்கு
நோய்நோக்குஒன்று அந்நோய் மருந்து.

2. கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்
செம்பாகம் அன்று பெரிது.

3. நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதுஅவள்
யாப்பினுள் அட்டிய நீர்.

4. யான்நோக்கும் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்.

5. குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும்.

6. உறாஅ தவர்போல் சொலினும் செறாஅர்சொல்
ஒல்லை உணரப் படும்.

7. செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்
உறாஅர்போன்று உற்றார் குறிப்பு.

8. அசைஇயற்கு உண்டுஆண்டுஓர் எர்யான் நோக்
பசையினள் பைய நகும். [கப்

9. ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே உள.

10. கண்ணொடு கண்இணை நோக்குஒக்கின் வாய்ச்
என்ன பயனும் இல. [சொற்கள்

1. கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றுஅறியும் [ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணே உள.

2. பிணிக்கு மருந்து பிறமன் அணிஇழை
தன்நோய்க்குத் தானே மருந்து.

3. தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு.

4. நீங்கின் தெறூஉம் குறுகும்கால் தண்என்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள்.

5. வேட்ட பொழுதின் அவைஅவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள்.

6. உறுதோறு உயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள்.

7. தம்மில் இருந்து தமதுபாத்து உண்டுஅற்றால்
அம்மா அரிவை முயக்கு.

8. வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு.

9. ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன்.

10. அறிதோறு அறியாமை கண்டுஅற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு.

1. நன்நீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்நீரள் யாம்வீழ் பவள்.

2. மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
பலர்காணும் பூஒக்கும் என்று.

3. முறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம்
வேல்உண்கண் வேய்த்தோள் அவட்கு.

4. காணின் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாண்இழை கண்ஒவ்வேம் என்று.

5. அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை.

6. மதியும் மடந்தை முகனும் அறியா
பதியின் கலங்கிய மீன்.

7. அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறுஉண்டோ மாதர் முகத்து.

8. மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி.

9. மலர்அன்ன கண்ணாள் முகம்ஒத்தி யாயின்
பலர்காணத் தோன்றல் மதி.

10. அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்.

1. பாலொடு தேன்கலந்து அற்றே பணிமொழி
வால்எயிறு ஊறிய நீர்.

2. உடம்பொடு உயிர்இடை என்னமற்று அன்ன
மடந்தையொடு எம்இடை நட்பு.

3. கருமணியில் பாவாய்நீ போதாய்யாம் வீழும்
திருநுதற்கு இல்லை இடம்.

4. வாழ்தல் உயிர்க்குஅன்னள் ஆயிழை சாதல்
அதற்குஅன்னள் நீங்கும் இடத்து.

5. உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்புஅறியேன்
ஒள்அமர்க் கண்ணாள் குணம்.

6. கண்உள்ளில் போகார் இமைப்பின் பருவரார்
நுண்ணியர்எம் காத லவர்.

7. கண்உள்ளார் காதல் அவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக்கு அறிந்து.

8. நெஞ்சத்தார் காதல் அவராக வெய்துஉண்டல்
அஞ்சுதும் வேபாக்கு அறிந்து.

9. இமைப்பின் கரப்பாக்கு அறிவல் அனைத்திற்கே
ஏதிலர் என்னும்இவ் ஊர்.

10. உவந்துஉறைவர் உள்ளத்துள் என்றும் இகந்து
ஏதிலர் என்னும்இவ் ஊர். [உறைவர்

1. காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்
மடல்அல்லது இல்லை வலி.

2. நோனா உடம்பும் உயிரும் மடல்ஏறும்
நாணினை நீக்கி நிறுத்து.

3. நாணொடு நல்ஆண்மை பண்டுஉடையேன் இன்று
காமுற்றார் ஏறும் மடல். [உடையேன்

4. காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு
நல்ஆண்மை என்னும் புணை.

5. தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு
மாலை உழக்கும் துயர்.

6. மடல்ஊர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற
படல்ஒல்லா பேதைக்குஎன் கண்.

7. கடல்அன்ன காமம் உழந்தும் மடல்ஏறாப்
பெண்ணின் பெருந்தக்கது இல்.

8. நிறைஅரியர் மன்அளியர் என்னாது காமம்
மறைஇறந்து மன்று படும்.

9. அறிகிலார் எல்லாரும் என்றேஎன் காமம்
மறுகின் மறுகும் மருண்டு.

10. யாம்கண்ணின் காண நகுப அறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு.

1. அலர்எழ ஆர்உயிர் நிற்கும் அதனைப்
பலர்அறியார் பாக்கியத் தால்.

2. மலர்அன்ன கண்ணாள் அருமை அறியாது
அலர்எமக்கு ஈந்ததுஇவ் ஊர்.

3. உறாஅதோ ஊர்அறிந்த கௌவை அதனைப்
பெறாஅது பெற்றுஅன்ன நீர்த்து.

4. கவ்வையால் கவ்விது காமம் அதுஇன்றேல்
தவ்என்னும் தன்மை இழந்து.

5. களித்தொறும் கள்உண்டல் வேட்டுஅற்றால்
வெளிப்படும் தோறும் இனிது. [காமம்

6. கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண்டு அற்று.

7. ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளும்இந் நோய்.

8. நெய்யால் எரிநுதுப்பேம் என்றுஅற்றால் கௌவை
காமம் நுதுப்பேம் எனல். [யால்

9. அலர்நாண ஒல்வதோ அஞ்சல்ஓம்பு என்றார்
பலர்நாண நீத்தக் கடை.

10. தாம்வேண்டின் நல்குவர் காதலர் யாம்வேண்டும்
கௌவை எடுக்கும் இவ்ஊர்.

1. செல்லாமை உண்டேல் எனக்குஉரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை.

2. இன்கண் உடைத்துஅவர் பார்வல் பிரிவுஅஞ்சும்
புன்கண் உடைத்துஆல் புணர்வு.

3. அரிதுஅரோ தேற்றம் அறிவுஉடையார் கண்ணும்
பிரிவுஓர் இடத்துஉண்மை யான்.

4. அளித்துஅஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்தசொல்
தேறியார்க்கு உண்டோ தவறு.

5. ஓம்பின் அமைந்தார் பிரிவுஓம்பல் மற்றுஅவர்
நீங்கின் அரிதுஆல் புணர்வு.

6. பிரிவுஉரைக்கும் வன்கண்ணர் ஆயின் அரிதுஅவர்
நல்குவர் என்னும் நசை.

7. துறைவன் துறந்தமை தூற்றாகொல் முன்கை
இறைஇறவா நின்ற வளை.

8. இன்னாது இனன்இல்ஊர் வாழ்தல் அதனினும்
இன்னாது இனியார்ப் பிரிவு.

9. தொடின்சுடின் அல்லது காமநோய் போல
விடின்சுடல் ஆற்றுமோ தீ.

10. அரிதுஆற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவுஆற்றிப்
பின்இருந்து வாழ்வார் பலர்.

1. மறைப்பேன்மன் யான்இஃதோ நோயை இறைப்பவர்
ஊற்றுநீர் போல மிகும். [க்கு

2. கரத்தலும் ஆற்றேன்இந் நோயைநோய் செய்தார்க்கு
உரைத்தலும் நாணுத் தரும்.

3. காமமும் நாணும் உயிர்காவாத் தூங்கும்என்
நோனா உடம்பின் அகத்து.

4. காமக் கடன்மன்னும் உண்டே அதுநீந்தும்
ஏமப் புணைமன்னும் இல்.

5. துப்பின் எவன்ஆவர் மன்கொல் துயர்வரவு
நட்பினுள் ஆற்று பவர்.

6. இன்பம் கடன்மற்றுக் காமம் அஃதுஅடுங்கால்
துன்பம் அதனின் பெரிது.

7. காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே உளேன்.

8. மன்உயிர் எல்லாம் துயிற்றி அளித்துஇரா
என்அல்லது இல்லை துணை.

9. கொடியார் கொடுமையின் தாம்கொடிய இந்நாள்
நெடிய கழியும் இரா.

10. உள்ளம்போன்று உள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்
நீந்தல மன்னோஎன் கண்.

1. கண்தாம் கலுழ்வதுஎவன் கொலோ தண்டாநோய்
தாம்காட்ட யாம்கண் டது.

2. தெரிந்துஉணரா நோக்கிய உண்கண் பரிந்து
பைதல் உழப்பது எவன். [உணராப்

3. கதும்எனத் தாம்நோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்கது உடைத்து.

4. பெயல்ஆற்று நீர்உலந்த உண்கண் உயல்ஆற்று
உய்வுஇல்நோய் என்கண் நிறுத்து.

5. படல்ஆற்று பைதல் உழக்கும் கடல்ஆற்றுக்
காமநோய் செய்தஎன் கண்.

6. ஓஒ இனிதே எமக்குஇந்நோய் செய்தகண்
தாஅம் இதன்பட் டது.

7. உழந்துஉழந்து உள்நீர் அறுக இழைந்துஇழைந்து
வேண்டி அவர்க்கண்ட கண்.

8. பேணது பெட்டார் உளர்மன்னே மற்றுஅவர்க்
காணது அமைவில கண்.

9. வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை
ஆர்அஞர் உற்றன கண்.

10. மறைபெறல் ஊரார்க்கு அரிதுஅன்றுஆல் எம்போல்
அறைபறை கண்ணார் அகத்து.

1. நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தஎன்
பண்பியார்க்கு உரைக்கோ பிற.

2. அவர்தந்தார் என்னும் தகையால் இவர்தந்துஎன்
மேனிமேல் ஊரும் பசப்பு.

3. சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறா
நோயும் பசலையும் தந்து.

4. உள்ளுவன் மன்யான் உரைப்பது அவர்திறம்ஆல்
கள்ளம் பிறவோ பசப்பு.

5. உவக்காண்என் காதலர் செல்வார் இவக்காண்என்
மேனி பசப்புஊர் வது.

6. விளக்குஅற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்
முயக்குஅற்றம் பார்க்கும் பசப்பு.

7. புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்அளவில்
அள்ளிக்கொள் அற்றே பசப்பு.

8. பசந்தாள் இவள்என்பது அல்லால் இவளைத்
துறந்தார் அவர்என்பார் இல்.

9. பசக்கமன் பட்டாங்குஎன் மேனி நயப்பித்தார்
நன்நிலையர் ஆவர் எனின்.

10. பசப்புஎனப் பேர்பெறுதல் நன்றே நயப்பித்தார்
நல்காமை தூற்றார் எனின்.

1. தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழ்இல் கனி.

2. வாழ்வார்க்கு வானம் பயந்துஅற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி.

3. வீழுநர் வீழப் படுவார்க்கு அமையுமே
வாழுநம் என்னும் செருக்கு.

4. வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅர் எனின்.

5. நாம்காதல் கொண்டார் நமக்குஎவன் செய்பவோ
தாம்காதல் கொள்ளாக் கடை.

6. ஒருதலையான் இன்னாது காமம்காப் போல
இருதலை யானும் இனிது.

7. பருவரலும் பைதலும் காணான்கொல் காமன்
ஒருவர்கண் நின்றுஒழுகு வான்.

8. வீழ்வாரின் இன்சொல் பெறாஅது உலகத்து
வாழ்வாரின் வன்கணார் இல்.

9. நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்டு
இசையும் இனிய செவிக்கு.

10. உறாஅர்க்கு உறுநோய் உரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு.

1. உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது.

2. எனைத்துஒன்று இனிதேகாண் காமம்தாம் வீழ்வார்
நினைப்ப வருவதுஒன்று இல்.

3. நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும்.

4. யாமும் உளேம்கொல் அவர்நெஞ்சத்து எம்நெஞ்சத்து
ஓஒ உளரே அவர்.

5. தம்நெஞ்சத்து எம்மைக் கடிகொண்டார் நாணார்
எம்நெஞ்சத்து ஓவா வரல்.

6. மற்றுயான் என்உளேன் மன்னோ அவரொடுயான்
உற்றநாள் உள்ள உளேன்.

7. மறப்பின் எவன்ஆவன் மன்கொல் மறப்புஅறியேன்
உள்ளினும் உள்ளம் சுடும்.

8. எனைத்து நினைப்பினும் காயார் அனைத்துஅன்றோ
காதலர் செய்யும் சிறப்பு.

9. விளியும்என் இன்உயிர் வேறுஅல்லம் என்பார்
அளிஇன்மை ஆற்ற நினைந்து.

10. விடாஅது சென்றாரைக் கண்ணினால் காணப்
படாஅதி வாழி மதி.

## அதிகாரம் 122.] [கனவுநிலை உரைத்தல்.

1. காதலர் தூதொடு வந்த கனவினுக்கு
யாதுசெய் வேன்கொல் விருந்து.

2. கயல்உண்கண் யான்இரப்பத் துஞ்சின் கலந்தார்க்கு
உயல்உண்மை சாற்றுவேன் மன்.

3. நனவினான் நல்கா தவரைக் கனவினான்
காண்டலின் உண்டுஎன் உயிர்.

4. கனவினான் உண்டாகும் காமம் நனவினான்
நல்காரை நாடித் தரற்கு.

5. நனவினான் கண்டதூஉம் ஆங்கே கனவும்தான்
கண்ட பொழுதே இனிது.

6. நனவுஎன ஒன்றுஇல்லை யாயின் கனவினான்
காதலர் நீங்கலர் மன்.

7. நனவினான் நல்காக் கொடியார் கனவினான்
என்எம்மைப் பீழிப் பது.

8. துஞ்சுங்கால் தோள்மேலர் ஆகி விழிக்குங்கால்
நெஞ்சத்தர் ஆவர் விரைந்து.

9. நனவினான் நல்காரை நோவர் கனவினான்
காதலர்க் காணா தவர்.

10. நனவினான் நம்நீத்தார் என்பர் கனவினான்
காணார்கொல் இவ்வூ ரவர்.

1. மாலையோ அல்லை மணந்தார் உயிர்உண்ணும்
வேலைநீ வாழி பொழுது.

2. புன்கண்ணை வாழி மருள்மாலை எம்கேள்போல்
வன்கண்ண தோநின் துணை.

3. பனிஅரும்பிப் பைதல்கொள் மாலை துனிஅரும்பித்
துன்பம் வளர வரும்.

4. காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து
ஏதிலர் போல வரும்.

5. காலைக்குச் செய்தநன்று என்கொல் எவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை.

6. மாலைநோய் செய்தல் மணந்தார் அகலாத
காலை அறிந்தது இலேன்.

7. காலை அரும்பிப் பகல்எல்லாம் போதுஆகி
மாலை மலரும்இந் நோய்.

8. அழல்போலும் மாலைக்குத் தூதுஆகி ஆயன்
குழல்போலும் கொல்லும் படை.

9. பதிமருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து.

10. பொருள்மாலை யாளரை உள்ளி மருள்மாலை
மாயும்என் மாயா உயிர்.

1. சிறுமை நமக்குஒழியச் சேண்சென்றார் உள்ளி
நறுமலர் நாணின கண்.

2. நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாரும் கண்.

3. தணந்தமை சால அறிவிப்ப போலும்
மணந்தநாள் வீங்கிய தோள்.

4. பணைநீங்கிப் பைந்தொடி சோரும் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள்.

5. கொடியார் கொடுமை உரைக்கும் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள்.

6. தொடியொடு தோள்நெகிழ நோவல் அவரைக்
கொடியர் எனக்கூறல் நொந்து.

7. பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்குஎன்
வாடுதோள் பூசல் உரைத்து.

8. முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல்.

9. முயக்குஇடைத் தண்வளி போழப் பசப்புஉற்ற
பேதை பெருமழைக் கண்.

10. கண்ணின் பசப்போ பருவரல் எய்துஇன்றே
ஒண்ணுதல் செய்தது கண்டு.

1. நினைத்துஒன்று சொல்லாயோ நெஞ்சே எனைத்து
எவ்வநோய் தீர்க்கும் மருந்து. [ஒன்றும்

2. காதல் அவர்இலர் ஆகநீ நோவது
பேதைமை வாழிஎன் நெஞ்சு.

3. இருந்துஉள்ளி என்பரிதல் நெஞ்சே பரிந்துஉள்ளல்
பைதல்நோய் செய்தார்கண் இல்.

4. கண்ணும் கொளச்சேறி நெஞ்சே இவைஎன்னைத்
தின்னும் அவர்க்காணல் உற்று.

5. செற்றார் எனக்கை விடல்உண்டோ நெஞ்சேயாம்
உற்றால் உறாஅ தவர்.

6. கலந்துஉணர்த்தும் காதலர்க் கண்டால் புலந்து
பொய்க்காய்வு காய்திஎன் நெஞ்சு. [உணராய்

7. காமம் விடுஒன்றோ நாண்விடு நன்நெஞ்சே
யானே பொறேன்இவ் இரண்டு.

8. பரிந்துஅவர் நல்கார்என்று ஏங்கிப் பிரிந்தவர்
பின்செல்வாய் பேதைஎன் நெஞ்சு.

9. உள்ளத்தார் காத லவர்ஆக உள்ளிநீ
யார்உழைச் சேறிஎன் நெஞ்சு.

10. துன்னாத் துறந்தாரை நெஞ்சத்து உடையேமா
இன்னும் இழத்தும் கவின்.

1. காமக் கணிச்சி உடைக்கும் நிறைஎன்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு.

2. காமம் எனஒன்றோ கண்இன்றுஎன் நெஞ்சத்தை
யாமத்தும் ஆளும் தொழில்.

3. மறைப்பேன்மன் காமத்தை யானோ குறிப்புஇன்றித்
தும்மல்போல் தோன்றி விடும்.

4. நிறைஉடையேன் என்பேன்மன் யானோஎன் காமம்
மறைஇறந்து மன்று படும்.

5. செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்
உற்றார் அறிவதுஒன்று அன்று.

6. செற்றவர் பின்சேறல் வேண்டி அளித்தரோ
வெற்றுஎன்னை உற்ற துயர்.

7. நாண்என ஒன்றோ அறியலம் காமத்தால்
பேணியார் பெட்ப செயின்.

8. பன்மாயக் கள்வன் பணிமொழி அன்றோநம்
பெண்மை உடைக்கும் படை.

9. புலப்பல் எனச்சென்றேன் புல்லினேன் நெஞ்சம்
கலத்தல் உறுவது கண்டு.

10. நிணம்தீயில் இட்டுஅன்ன நெஞ்சினார்க்கு உண்டோ
புணர்ந்துஊடி நிற்பேம் எனல்.

**1.** வாள்அற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற
நாள்ஒற்றித் தேய்ந்த விரல்.

**2.** இலங்கிழாய் இன்று மறப்பின்என் தோள்மேல்
கலம்கழியும் காரிகை நீத்து.

**3.** உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரல்நசைஇ இன்னும் உளேன்.

**4.** கூடிய காமம் பிரிந்தார் வரவுஉள்ளிக்
கோடுகொடு ஏறும்என் நெஞ்சு.

**5.** காண்கமன் கொண்கனைக் கண்ஆரக் கண்டபின்
நீங்கும்என் மென்தோள் பசப்பு.

**6.** வருகமன் கொண்கன் ஒருநாள் பருகுவன்
பைதல்நோய் எல்லாம் கெட.

**7.** புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்
கண்அன்ன கேளிர் வரின். [கொல்

**8.** வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை அயர்கம் விருந்து.

**9.** ஒருநாள் எழுநாள்போல் செல்லும்சேண் சென்றார்
வருநாள்வைத்து ஏங்கு பவர்க்கு.

**10.** பெறின்என்னும் பெற்றக்கால் என்னும் உறின்
உள்ளம் உடைந்துஉக்கக் கால். [என்னும்

1. கரப்பினும் கைஇகந்து ஒல்லாநின் உண்கண்
உரைக்கல் உறுவதுஒன்று உண்டு.

2. கண்நிறைந்த காரிகைக் காம்பேர்தோள் பேதைக்குப்
பெண்நிறைந்த நீர்மை பெரிது.

3. மணியில் திகழ்தரும் நூல்போல் மடந்தை
அணியில் திகழ்வதுஒன்று உண்டு.

4. முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை
நகைமொக்குள் உள்ளதுஒன்று உண்டு.

5. செறிதொடி செய்துஇறந்த கள்ளம் உறுதுயர்
தீர்க்கும் மருந்துஒன்று உடைத்து.

6. பெரிதுஆற்றிப் பெட்பக் கலத்தல் அரிதுஆற்றி
அன்புஇன்மை சூழ்வது உடைத்து.

7. தண்ணம் துறைவன் தணந்தமை நம்மினும்
முன்னம் உணர்ந்த வளை.

8. நெருநற்றுச் சென்றார்எம் காதலர் யாமும்
ஏழுநாளே மேனி பசந்து.

9. தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி
அஃதுஆண்டு அவள்செய் தது.

10. பெண்ணினால் பெண்மை உடைத்துஎன்ப கண்
காமநோய் சொல்லி இரவு. [ணினால்

1. உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்குஇல் காமத்திற்கு உண்டு.

2. தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்
காமம் நிறைய வரின். [துணையும்

3. பேணது பெட்பவே செய்யினும் கொண்கனைக்
காணது அமையல கண்.

4. ஊடல்கண் சென்றேன்மன் தோழி அதுமறந்து
கூடல்கண் சென்றதுஎன் நெஞ்சு.

5. எழுதும்கால் கோல்காணுக் கண்ணேபோல் கொண்
பழிகாணேன் கண்ட இடத்து. [கன்

6. காணும்கால் காணேன் தவறாய காணுக்கால்
காணேன் தவறுஅல் லவை.

7. உய்த்தல் அறிந்து புனல்பாய் பவரேபோல்
பொய்த்தல் அறிந்துஎன் புலந்து.

8. இளித்தக்க இன்ன செயினும் களித்தார்க்குக்
கள்அற்றே கள்வநின் மார்பு.

9. மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார்.

10. கண்ணின் துனித்தே கலங்கினள் புல்லுதல்
என்னினும் தான்விதுப் புற்று.

1. அவர்நெஞ்சு அவர்க்காதல் கண்டும் எவன்நெஞ்சே
நீஎமக்கு ஆகா தது.

2. உறாஅ தவர்க்கண்ட கண்ணும் அவரைச்
செறாஅர்எனச் சேறிஎன் நெஞ்சு.

3. கெட்டார்க்கு நட்டார்இல் என்பதோ நெஞ்சேநீ
பெட்டாங்கு அவர்பின் செலல்.

4. இனிஅன்ன நின்னொடு சூழ்வார்யார் நெஞ்சே
துனிசெய்து துவ்வாய்காண் மற்று.

5. பெறாஅமை அஞ்சும் பெறின்பிரிவு அஞ்சும்
அறாஅ இடும்பைத்துஎன் நெஞ்சு.

6. தனியே இருந்து நினைத்தக்கால் என்னைத்
தினிய இருந்ததுஎன் நெஞ்சு.

7. நாணும் மறந்தேன் அவர்மறக்கு அல்லாஎன்
மாணா மடநெஞ்சில் பட்டு.

8. எள்ளின் இளிவாம்என்று எண்ணி அவர்திறம்
உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு.

9. துன்பத்திற்கு யாரே துணையாவார் தாம்உடைய
நெஞ்சம் துணைஅல் வழி.

10. தஞ்சம் தமர்அல்லர் ஏதிலார் தாம்உடைய
நெஞ்சம் தமர்அல் வழி.

1. புல்லாது இராஅப் புலத்தை அவர்உறும்
அல்லல்நோய் காண்கம் சிறிது.

2. உப்புஅமைந்து அற்றால் புலவி அதுசிறிது
மிக்குஅற்றால் நீள விடல்.

3. அலந்தாரை அல்லல்நோய் செய்துஅற்றால் [தம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல்.

4. ஊடி யவரை உணராமை வாடிய
வள்ளி முதல்அரிந்து அற்று.

5. நலத்தகை நல்லவர்க்கு ஏஎர் புலத்தகை
பூஅன்ன கண்ணார் அகத்து.

6. துனியும் புலவியும் இல்லாயின் காமம்
கனியும் கருக்காயும் அற்று.

7. ஊடலின் உண்டுஆங்குஓர் துன்பம் புணர்வது
நீடுவது அன்றுகொல் என்று.

8. நோதல் எவன்மற்று நொந்தார்என்று அஃதுஅறியும்
காதலர் இல்லா வழி.

9. நீரும் நிழலது இனிதே புலவியும்
வீழுநர் கண்ணே இனிது.

10. ஊடல் உணங்க விடுவாரோடு என்நெஞ்சம்
கூடுவேம் என்பது அவா.

1. பெண்இயலார் எல்லாரும் கண்ணின் பொதுஉண் [பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு.

2. ஊடி இருந்தேம்ஆத் தும்மினார் யாம்தம்மை
நீடுவாழ்க என்பாக்கு அறிந்து.

3. கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று.

4. யாரினும் காதலம் என்றேன்ஆ ஊடினாள்
யாரினும் யாரினும் என்று.

5. இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேன்ஆக்
கண்நிறை நீர்கொண் டனள்.

6. உள்ளினேன் என்றேன்மற்று என்மறந்தீர் என்று [என்னைப்
புல்லாள் புலத்தக் கனள்.

7. வழுத்தினாள் தும்மினேன் ஆக அழித்துஅழுதாள்
யார்உள்ளித் தும்மினீர் என்று.

8. தும்முச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல்
எம்மை மறைத்திரோ என்று.

9. தன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்குநீர்
இந்நீரர் ஆகுதிர் என்று.

10. நினைத்துஇருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்
யார்உள்ளி நோக்கினீர் என்று.

1. இல்லை தவறுஅவர்க்கு ஆயினும் ஊடுதல்
வல்லது அவர்அளிக்கும் ஆறு.

2. ஊடலில் தோன்றும் சிறுதுனி நல்அளி
வாடினும் பாடு பெறும்.

3. புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு
நீர்இயைந் தன்னார் அகத்து.

4. புல்லி விடாஅப் புலவியுள் தோன்றும்என்
உள்ளம் உடைக்கும் படை.

5. தவறுஇலர் ஆயினும் தாம்வீழ்வார் மென்தோள்
அகறலின் ஆங்குஒன்று உடைத்து.

6. உணலினும் உண்டது அறல்இனிது காமம்
புணர்தலின் ஊடல் இனிது.

7. ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னும்
கூடலில் காணப் படும்.

8. ஊடிப் பெறுகுவம் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலில் தோன்றிய உப்பு.

9. ஊடுக மன்னோ ஒளிஇழை யாம்இரப்ப
நீடுக மன்னோ இரா.

10. ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்குஇன்பம்
கூடி முயங்கப் பெறின்.